# அகல் விளக்கு

கைதடி உறவுகளின் காலாண்டு இதழ்

ஒளி:1, திரி:3 ஆடி - ஆவணி - புரட்டாதி 2008


## புலம்பெயர் உறவுகளுக்கு கைதடி மக்கள் வேண்டுகோள்

கைதடி கிராமத்தின் வளர்ச்சிக்காகவும் அங்கு வாழும் மக்களின் மேம்பாட்டிற்காகவும் அயராது உழைக்கின் புலம்பெயர் வாழ் உறவுகளுக்கு நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்ற அதேவேளை புலம்பெயர் நாடுகளிலுள்ள கைதடி உறவுகள் அனைவரும் ஒற்றுமையுடன் செயற்படவேண்டும் என்றும் அனைத்து உறவுகளையும் வேண்டுகின்றோம். இவ்வாறு கைதடி மக்கள் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- 'ஆரம்பத்தில் ஒருவர் இருவர் என எமது மண்ணை விட்டு புலம்பெயர்ந்து பெரும் கஸ்டங்களின் மத்தியில் சிறுகச் சிறுக சேமித்து சகோதரர்கள் மற்றும் உறவுகள் என நூற்றுக்கணக்கானவர்களை உங்களது நாடுகளுக்கு அழைத்தீர்கள். உங்கள் உதவியினால் உங்களது குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் மட்டுமல்ல ஊருக்கே இன்று பசியை போக்குகின்ற நிலையை ஏற்படுத்தியிருக்கின்றீர்கள். எமது கிராமத்திலிருந்து வீட்டிற்கு ஒருவர் என்ற வகையில் இன்று புலம்பெயர் நாடுகளில் வசிக்கின்ற நிலையினை நாட்டின் இன்றைய சூழல் ஏற்படுத்தியுள்ளது - எது என்னவாக இருந்தாலும் எமது கிராமத்தை தாங்குகின்ற தூண்களாக புலம்பெயர் உறவுகளே திகழுகின்றார்கள் என்பதனை எவரும் மறுப்பதற்கில்லை.

இந்த நிலையில் தான் புலம்பெயர் உறவுகளை ஒன்றிணைக்கும் வகையில் கைதடி மேம்பாட்டுத் திட்ட செயற்பாடுகள் அமைந்துள்ளன. இதுவரை காலமும் சனசமூக நிலைய மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மேம்பாட்டுப் பணிகள் இன்று அனைவரும் ஒன்றிணைந்து கைதடி மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருவது பெரும் வரவேற்புக்குரிய ஒன்றாகும்

அரசாங்கத்தினையோ அல்லது ஏனைய நிறுவனங்களையோ எதிர்பார்க்காது எங்கள் கிராமத்தினை நாங்களே கட்டியெழுப்புவோம் என்ற சிந்தனையின் அடிப்படையில் மெல்ல மெல்ல எமது கிராமம் வளர்ச்சியடைந்து வருகி ன்றது.சுடலை மேட்டிலும் கலட்டிக் காணியிலும் கொல னிகளிலும் அடிப்படை வசதிகளின்றி வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட எம் மக்கள் வாழ்க்கையில் மாற்றம் ஏற்பட்டு வருகின்றது. மின்சாரம், மலசலகூடம், போக்குவரத்து உட்பட்ட வசதிகளின்றியிருந்த எங்கள் கிராமத்தில் புலம்பெயர் உறவுகளின் உதவியினால் புதிய ஒளி பாய்ச்சப்படுகின்றது.

தாயகத்தில் மனிதன் உயிர்வாழ முடியாத இன்றைய சூழலில்

(2ம் பக்கத் பார்க்க)

## உள்ளே................


*உறவுகள் குரல்

*53 வது அகவையில் கை.தெ.ச.ச.நிலையம்

*என் இனிய கிராமமே..

*குணாவின் குறிப்புகள்

*சாதனையாளர் செல்லக்கண்டு

*பிரான்ஸ் ஒன்றுகூடல்

*என் இனிய தமிழே

*சிரி...சிரி...


## நமது குரல்

### ஒற்றுமை, நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு

எமது தாயக உறவுகளின் மேம்பாட்டினையே நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட செயற்பாடுகள் புலம்பெயர் உறவுகளினதும் ஒற்றுமைக்கும் கூட்டுத் தலைமைக்கும் வழிகாட்டும் வகையில் அமைந்து வருவதும் அதனடிப்படையில் எல்லோரிடையேயும் பரஸ்பர புரிந்துணர்வும் சேவை மனப்பாங்கும் அதிகரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

குறுகிய நாட்களிலே இந்த மாற்றங்களை நாம் அவதானித்தாலும் எம்மிடையே சில விஷம சக்திகள் முளைவிட்டுக் கொண்டுதான் இருக்கின்றன.இவற்றினை முளையிலேயே கிள்ளி விட வேண்டிய பொறுப்பும் கடமையும் எம்மிடம் தான் இருக்கின்றது. தாயகத்தில் சனசமூக நிலையங்கள் தான் எமது அடையாளங்களாக இருக்கின்றன. அதனைப் பேணும் வகையிலும் புலம்பெயர் மண்ணிலும் அதன் உறுப்பினர்களாகிய நாங்கள் செயற்பட்டு வருவது அனைவரும் அறிந்ததே.

தனது குடும்பத்திற்கு தான் வாழ்ந்த சமூகத்துக்கு உதவுவதும் அந்த பண்புகளை தொடர்ந்து கடைப்பிடிப்பதும் ஒவ்வொரு மனிதனுடைய தனிப்பட்ட விடயமாக கருதாமல் அவனுடைய பொதுநல நோக்கைப் பற்றி நாம் உணரவேண்டும். அத்தகைய உணர்வு வருவதன் மூலம் தான் ஒன்றுபட்ட சக்தியாக நாம் உயர முடியும்.

கிராமத்திலே இருக்கக்கூடிய எங்களுடைய சனசமூக நிலையங்கள் சிறப்பாக செயற்படுவதற்கு புலம்பெயர் நாடுகளிலுள்ள அதன் அங்கத்தவர்கள் தாராளமாக செயற்பட வேண்டும். ஏராளமாக உதவவேண்டும். இந்த நோக்கத்தை பூரணமாக நிறைவேற்றுவதற்கு நாம் ஒவ்வொருவரும் கடமையாற்றும் அதேவேளை சனசமூக நிலையங்களின் அடையாளத்தை வைத்துக் கொண்டு எங்களை நாங்களே பிரித்துப் பார்க்கக்கூடாது.

காலம் காலமாக இவ்வாறான உணர்வு நிலை எம்மிடையே ஊறியிருப்பதால் இந்த நூற்றாண்டில் கூட ஒரு சிலர் இதற்கு பலியாகிப் போயுள்ளனர். எனவே இவ்வாறான நிலை மாற்றப்படவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பும் ஏக்கமும் ஆகும். ஐரோப்பாவில் உள்ள கைதடி உறவுகளாகிய நாங்கள் அனைவருமே ஒன்றுபட்டு ஒரே வழியில் செயற்பட்டு கொண்டிருப்பதாலேயே கைதடியில் பல பணிகளை எம்மால் செய்ய முடிகின்றது.

அண்மையில் கைதடியில் நடைபெற்ற பிரான்ஸ் கைதடி அபிவிருத்திக் கழகத்தின் கல்விமேம்பாட்டுத் திட்ட விழாவில் ஐரோப்பாவில் வதியும் எம்மவரின் ஒத்துழைப்பையும் ஒற்றுமையையும் பற்றி பலர் வாயாரப் புகழ்ந்து தள்ளினார்கள். அது மட்டுமன்றி எமது செயற்பாடுகள் பற்றி அறிகின்றவர்கள் அனைவருமே 'இது எப்படி உங்களால் சாத்தியமானது': என்று வியந்தார்கள்.

குறிச்சிகள் மற்றும் சனசமூக நிலையங்கள் பற்றி பிரித்துப் பார்த்து நான் பெரிசு நீ சிறிசு என்று பேசுகிறவர்கள் பற்றி அறிகின்ற போதும் நாம் தலைகுனிந்து வெட்கப்பட வேண்டியவர்களாக இருக்கின்றோம். இந்த நூற்றாண்டில் இப்படியா? அதுவும் ஐரோப்பிய மண்ணிலா? என்ற கேள்விகளை எழுப்பவேண்டியிருக்கின்றது.

நடந்தவைபற்றி பேசிக்கொண்டிருப்பது அவை பற்றி அயல்நாடுகளுக்கும் தகவல்கள் பரிமாறிக்கொண்டிருப்பதை விட பிரச்சனைக்குத் தீர்வு காண்பது பற்றி சிந்திக்கவேண்டும். அந்த சிந்தனை தான் எமது விசுவாசமான செயற்பா டுகளுக்கு அடையாளம் காட்டும். எனவே இவற்றைப் புரிந்து கொண்டு செயற்படுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

எங்களிடையேயுள்ள நீடித்த உறவும் ஒற்றுமையும் தான் கைதடி மக்களின் மேம்பாட்டுக்குள்ள ஒரே வழியாகும். இதனை நாம் கடைப்பிடிக்க பழகவேண்டும். பிரச்னைகள் எங்கு தான் இல்லை. எனவே அவற்றை சாத்தியமான வழிகள் மூலம் தீர்த்து எமது ஒற்றுமையை நிலை நாட்டுவோம். அதுவே இன்றைய தேவையும் நாளைய எதிர்பார்ப்புமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அகல் விளக்கு**

வெளியீடு:
கைதடிஅபிவிருத்திக் கழகம் - பிரான்ஸ்

பிரதம ஆசிரியர்
என்.கே.ரி.

ஆசிரியர் குழு

மா.ஜெயந்தன்
சி.கதிர்செல்வன்
இ.துஷிகரன்

**சுவிஸ்**
இ.சூரி

**ஜெர்மனி**
செ.கிருபா

**இத்தாலி**
வை.சண்முகநாதன்

**லண்டன்**
என்.கனோத்

**ஹொலண்ட்**
சி.ராஜன்

**டென்மார்க்**
பூ.தர்மலிங்கம்

**நோர்வே**
கி.நமசிவாயம்
செல்வி.கோ. மதனா

**கனடா**
நா.கந்தையா
திருமதி கேதா

**அமெரிக்கா**
கந்த.ராஜலிங்கம்

**கைதடி**
சி.வே..சின்னத்தம்பி
சி.நிசாகரன்

தொடர்புகளுக்கு
K.THURAISINGAM
211 Av.Maurice Berteaux,
78500 SARTROUVILLE
FRANCE
தொலைபேசி
06 50 65 05 11
Senthalann@ hotmail.fr

# முயற்சி உயர்ச்சியைத் தரும்

## உறவுகளின் குரல்

சுமார் 30 ஆண்டுகளுக்கு முன் நடந்த சம்பவம் இன்றும் என் நினைவில் நிழலாடுகின்றது. அப்பொழுது நாங்கள் எல்லோரும் சிறுவர்கள். எமது கிராமத்தில் சரஸ்வதி சனசமூக நிலைய உறுப்பினரான பா. செல்வராசா காலமான போது அவருக்கு கண்ணீர் அஞ்சலி வெளியிட வேண்டும் என்று தீர்மானித்து- அவரது போட்டோவையும் எடுத்துக் கொண்டு யாழ்ப்பாணத்தில் அச்சகம் ஒன்றுக்கு சென்று கண்ணீர் அஞ்சலி நோட்டீஸ் வெளியிட வேண்டும் என்று கூறினோம். கண்ணீர் அஞ்சலியை எழுதித்தருமாறு கூறினார்கள். அங்கேயே ஒரு வெள்ளைப் பேப்பரையும் பேனாவையும் பெற்று கண்ணீர் அஞ்சலி வரிகளை எழுதிக் கொடுத்து 200 நோட்டீஸ்கள் வேண்டுமென்று கூறினோம். உடன் படத்தையும் கொடுத்தோம். படம் புளொக் செய்தால் தான் பிரசுரிக்க முடியும் என்று கூறினார்கள். இதனால் அங்கு நோட்டீஸ் அடிப்பதை நிறுத்தி வேறு அச்சகம் சென றோம்.இவ்வாறு பல அச்சகங்கள் சென்றும் நோட்டீஸ் அடிக்க முடியவில்லை. இங்கு நாம் பட்ட அலைச்சல்களில் இருந்து பெற்ற அனுபவம் 'புளொக்'கை வேறு இடத்திலும் நோட்டீசை வேறு இடத்திலும் செய்து ஒருவாறு கண்ணீர் அஞ்சலி பிரசுரத்தை கையில் எடுப்பதற்கு மாலை யாகி விட்டது. காலையில் சென்றவர்கள் மாலைவரை காத்திருந்து இந்தக் கண்ணீர் அஞ்சலி பிரசுரத்தை ஊருக்கு கொண்டு வர இறந்தவரின் இறுதிக்கிரிகைகள் அவரது இல்லத்தில் முடிவடைந்து பூதவுடல் வீட்டிலிருந்து வெளியே எடுத்து வரும் நேரம் நாம் உள்ளே நுழைந்தோம். கையில் வைத்திருந்த பிரசுரங்களை மரண வைபவத்தில் கலந்து கொண்ட அனைவரிடமும் கொடுத்ததுடன் சுவரொட்டிகளிலும் ஒட்டிவிட்டோம். இந்தச் சம்பவம் அப்பொழுது எங்களுக்கு ஒரு சாதனையாகவே இருந்தது. தொடர்ந்து இவ்வாறு பல கண்ணீர்ப் பிரசுரங்களையும் கல்வெட்டுக்களையும் வெளியி

(3ம் பக்கம் பார்க்க)

# புலம்பெயர் உறவுகள்... (1ம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாட்டில் வாழும் உறவுகளின் உதவி தாயக உறவுகளுக்கு பெரிய ஆறுதலாக இருக்கின்றது. தினமும் தாயகத்தில் இடம்பெறும் சாவுச்சம்பவங்களுக்கு மத்தியிலும் ஆலயவிழாக்கள் மற்றும் குடும்ப வைபவங்கள் சிறப்பாகவே நடைபெறுகின்றன. யுத்த நெருக்குவாரங்களின் மத்தியில் வாழப் பழகிவிட்ட மக்கள் தங்கள் கலாச்சார பழக்க வழக்கங்களைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருவதற்கு பின் தளமாக புலம்பெயர் நாடுகளிலுள்ள உறவுகளின் உதவி அனுசரணையாக இருக்கிறது.

எமது மக்களின் பசி போக்குகின்ற புலம்பெயர் உறவுகள் கிராமத்தின் அபிவிருத்தி பணிகளையும் முன்னெடுப்பதற்கு நிச்சயம் உதவுவார்கள்.இன்றைய சூழல் அபிவிருத்திப் பணிகளுக்கு தடையாக இருந்தாலும் நாளை ஒரு விடியல் ஏற்பட்டு சுதந்திரக் காற்று வீசுகின்ற போது இதனை நிறைவேற்றும் வகையிலான திட்டங்களுக்கும் அடித்தளமிட வேண்டும்.

மக்களின் இயல்பு வாழ்க்கை சீரழிந்து போயுள்ள நிலையில் அவர்களின் அன்றாடப் பிரச்னைகளுக்கு உதவவேண்டிய காலமே இன்றைய காலமாகும். இந்த நிலையில் தான் நான்கு திக்கு கைதடியும் ஒன்றுபட்டு ஒற்றுமையுடன் வளரவேண்டும். இதற்காக கிராமத்திலுள்ள எமது சனசமூக நிலையங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் புலம்பெயர் நாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கும் கைதடி அமைப்புக்கள் யாவும் இந்த உணர்வுடனே செயற்படவேண்டும் என்று விரும்புகின்றோம்.

கைதடி தெற்கு பகுதிக்கு துன்பம் வருகின்றபோது ஏனைய மேற்கு,கிழக்கு பகுதிகளிலுள்ளவர்கள் ஆறுதல்களை தந்து அவர்கள துன்பத்தில் பங்கெடுக்க வேண்டும். இதே போன்று ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்படுகின்ற துன்பம், இன்பம் அனைத்திலும் நான்கு பகுதிகளில் உள்ளவர்களும் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும். இந்த நிலை வாழையடி வாழையாக எங்களுக்குள் இன்னும் நீடித்து வருகின்றது. இது தொடரவேண்டும்.

இதேவேளை இதிலே ஒரு பகுதி மக்கள் எழுச்சி அடைகின்றபோது அந்த எழுச்சியில் எல்லோரும் கைகோர்த்து எங்கள் எல்லோருக்கும் ஏற்பட்ட எழுச்சியாக அதனை ஏற்றுக்கொண்டு பங்கு கொள்ளவேண்டும். இது தான் எமது நிலைத்த உறவுக்கும் ஒற்றுமைக்கும் வழிகாட்டியாக அமையும் என்று நம்புகின்றோம். இதனைத் தான் புலம்பெயர்ந்து வாழ்கின்ற கைதடி உறவுகளும் கடைப்பிடிப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

சமுதாய முன்னேற்றத்துக்காக எங்கள் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்ட சனசமூக நிலையங்களை சிறப்பாக இயக்குவதற்கு போதிய நிதிவசதிகளின்றி நாங்கள் சிரமப்பட்ட காலங்கள் நிறையவே உண்டு. நாளாந்த பத்திரிகைகள் மற்றும் வாராந்த பதிப்புக்களை நிலைய வாசிகசாலைகளில் போடவும் நிலைய அங்கத்தவர்கள் பாதிக்கப்படும்போது அவர்களுக்கு உதவுவதற்கும் ஏன் நிலைய நிகழ்வுகளை கூட கொண்டாடுவதற்கு போதிய வசதிகளின்றி சிரமப்பட்டோம். அங்கத்தவர்களின் உதவியுடனேயே மேற்குறிப்பிட்டவற்றை நாம் நிலையங்களில் முடிந்த அளவு செய்தோம்.ஆனாலும் நிதிப்பிரச்னை எமக்கு பெருந்தடையாகவே இருந்தன. ஆனால் இன்று புலம்பெயர் உறவுகளின் உதவி எமக்கு இத்தகைய பிரச்னைகளுக்கு இடமில்லாமல் செய்துவிட்டது.

மேலும் மக்கள் நட்புறவுக்கழகம் ஊடாக புலம்பெயர் உறவுகள் வழங்குகின்ற உதவிகள் சனசமூக நிலையங்கள் மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதால் பல பயனாளிகளை சனசமூக நிலையங்கள் கொண்டிருப்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. இந்த நிலை மேலும் தொடரவேண்டும்.இதற்கு புலம்பெயர் நாடுகளிலுள்ள கைதடி அமைப்புக்கள் சிறப்பாக செயற்படவேண்டும்□

0033139132407

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உறவுகளின் குரல்....(2ம் பக்கத் தொடர்ச்சி)

ட்டதுடன் மட்டும் நிற்காது எமது நிலையத்தின் குரலாக 'கிராமத்தின் குரல்' என்னும் சஞ்சிகையை வெளியிட்டோம். பின்னர் திரு.ப.செல்லத்துரை ஆசிரியரை கௌரவித்தபோது யாழ்ப்பாண பத்திரிகை ஒன்றில் சிறப்பு மலர் ஒன்றினையும் வெளியிட்டோம்.

மேற்குறிப்பிட்டவையெல்லாம் பலத்த சிரமத்தின் மத்தியில் (நிதிவசதியின்மை) தான் செய்து முடித்தோம். ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது. எங்களுக்கு என்று ஒரு பத்திரிகை வெளியிடும் அளவுக்கு வளர்ச்சியடைந்து விட்டோம். எங்களுடன் இந்தப் பணிகளில் இணைந்திருந்தவர்கள் பலர் நாட்டுச் சூழலினால் வெளிநாடுகளுக்கு சென்றுவிட்ட போதிலும் குறிப்பிட்ட பணியினை முன்னெடுக்கும் வகையில் 'அகல்விளக்கு' பத்திரிகை வெளியிடுகின்றார்கள் என்பதனை எண்ணி மகிழ்ச்சியடைகின்றோம்.

இந்த வளர்ச்சி பத்திரிகையுடன் மட்டும் நின்று விடாது புத்தகங்களாகவும் வெளிவரவேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பு. அதனை நிறைவு செய்யும் வகையில் பத்திரிகையில் வெளியாகும் விடயங்கள் அனைத்தும் தரம் பிரிக்கப்பட்டு கவிதை, கட்டுரை, துணுக்குகள் என புத்தகங்கள் வெளியிடப்படும் என்று 'அகல் விளக்கு' ஆசிரியர் குழுவினருடன் தொடர்பு கொண்டபோது அறிந்து கொண்டோம். நன்று அப்படியாகட்டும்.அதற்கும் எமது பாராட்டுக்கள்

கடந்த அகல்விளக்கு கலைத்துறையை சேர்ந்த டென்மார்க் குணம் (கைதடி தெற்கு சனசமூக நிலையம்) பற்றிய தகவல்களை வெளியிட்டது போன்று எமது கிராமத்தில் இருக்கக்கூடிய திறமையாளர்களையும் சாதனையாள ர்களையும் அடையாளங் கண்டு அவர்களது குறிப்புக்களை வெளியீடுவீர்களென நம்புகின்றேன்.

அஞ்சலி பிரசுரம் வெளியிட வக்கில்லாதவர்கள் பத்திரிகை, புத்தகங்கள் வெளியிடும் அளவுக்கு துணிந்துவிட்டார்களே... இந்த துணிவு எப்படி வந்தது

முனைவும் முயற்சியும் இருந்தால் உயர்ச்சி அடைவார்கள் என்பதற்கு உதாரணமாக செயற்படும் எமது உறவுகள் அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

நன்றி

சமூகத்தொண்டன்- கைதடி

### பிரான்ஸ் தலைவரிடமிருந்து......

'அகல் விளக்கு' அகிலமெல்லாம் வாழும் எம் உறவுகளின் கைவிளக்காக துலங்கவும் தாயகத்து உறவுகளின் துயர்துடைக்க பாடுபடும் புலம்பெயர் உறவுகளுக்கு என்றும் துணையாய் இருக்கவும் என் வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஊடகத்துறையோடு உறவாடிக்கொண்டிருக்கும் எம் உறவுகளில் ஒருவரான என்.கே.ரி. அவர்கள் ஆசிரியராயிருந்து அகல்விளக்கு ஒளி பெற பாடுபட்டுக் கொண்டிருக்கின்றார். அவருக்கு எனது நன்றிகளும் பாராட்டுக்களும்-

அகல்விளக்கு ஜனரஞ்சகமான படைப்புக்களுடன் தொடர்ந்து வெளிவரவேண்டும் என்பதே எனது விருப்பமாகும். அதற்காக நாம் அனைவரும் ஒத்துழைக்கவேண்டும். உலகெங்கும் பரந்து வாழும் கைதடி உறவுகள் யாவரும் இது பற்றி சிந்திக்க வேண்டும்.

கைதடி மக்களின் மேம்பாட்டு பணிகளுக்கு என நாம் ஆரம்பித்த திட்டங்களின் மைற்கல்லாக அகல் விளக்கு பணி அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து பணிகளை செய்வோம்.பலனை எதிர்பார்க்கமாட்டோம்.

செ.சின்னத்துரை,தலைவர்
கைதடி அபிவிருத்திக் கழகம்- பிரான்ஸ்

### ஊரிலிருந்து ஒரு மடல்...

'அகல் விளக்கு' கிடைக்கப் பெற்றேன். மகிழ்ச்சி. வளரும் இளையதலைமுறையினரிடையே இலைமறைகாயாய் இருக்கும் திறமைகளை வெளிக்கொணரும் வகையிலும் அவர்களுக்கு களம் அமைக்கும் பணியிலும் 'அகல்விளக்கு' பங்களிப்பு செய்வது வரவேற்கக் கூடியதே.

குறிப்பாக எமது கிராமத்தவர்களான மா.ஜெயந்தன், ப.றொஜிந்தன், குயில், தர்சன், ஆனந்தன் , பாஸ்கர் ஆகியோர் உட்பட பலரின் ஆக்கங்கள் கண்டு வியந்து போனேன். இவர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள். 'சுவர் இருந்தால் தானே சித்திரம் வரையலாம்'சுவர் இருக்கின்றது எனவே உங்கள் ஆற்றல்களை இங்கே வெளிப்படுத்துங்கள் என்று 'அகல்விளக்கு' எங்களுக்காக கடை விரித்திருக்கின்றது பாராட்டுதலுக்குரியது.

எங்கள் எண்ணங்களை அபிலாஷைகளை வெளிப்படுத் துவதற்கென எங்களுக்காக எம்மவர்களால் வெளியிடப்படும் சஞ்சிகை என்ற மகிழ்ச்சி மனதுக்குள் உட்கார்ந்து சந்தோஷ த்தை ஏற்படுத்துகின்றது

தொடர்ந்து உங்கள் பணி தொடர வாழ்த்துகின்றேன்

தூரிகை- கைதடி

### சுவிஸிலிருந்து.....

'அகல்விளக்கு' 2 வது இதழ் கிடைக்கப் பெற்றேன். நல்ல கருத்துக்களையும் ஆக்கங்களையும் தாங்கி இவ்விதழ் வெளிவந்திருப்பது சிறப்பிற்குரியது

சிரி...சிரி... பகுதியில் உண்மையில் நடந்த சம்பவம் ஒன்றை பிரசுரித்துள்ளீர்கள். ஐரோப்பிய நாட்டிற்கு வந்தும் எம்மவர் சிலர் திருந்தவில்லை என்பதை எல்லோரும் புரிந்திருப்பார்கள் என்று நம்புகின்றேன்.

சிரி...சிரி.. விடயங்களை மேலும் கூட்டவேண்டும்.

சில கவிதைகளில் சாரமில்லாது விட்டாலும் காரம் இருப்ப தனை உணர்ந்தேன். தொடர்ந்து சிறுகதைகள் மற்றும் அறிவி யல் சார்ந்த விடயங்களையும் குறுக்கெழுத்து மற்றும் அரசி யல், சினிமா, உலக விவகாரங்களையும் எதிர்பார்க் கின்றேன். கைதடி மக்கள் ஒவ்வொருவரின் கரங்களிலும் இந்த இதழ் இருக்க வேண்டும்.

- சுவிஸ் மகன்

### சொர்க்கம்

தாயின் மடியே
கவலை தீர்க்கும் மருந்து
ஆம்
தெரிந்து கொள்ளுங்கள்
தாயின் கருவறையே
சொர்க்கம் தான்
கல்லறைக்குப் பின்னர்
சொர்க்கமா? நரகமா
என்று ஏங்குபவர்களே
புரிந்து கொள்ளுங்கள்
நாம் குடியிருந்த
கோவிலை
வணங்கினால் அதுவே
பிறப்பின் பயனைத் தரும்
அது தான் சொர்க்கம்
கருவறையை கவனியாது
கல் வைத்த இடமெல்லாம்
கையெடுத்துக்
கும்பிடுவதில் பயனில்லை
உணர்ந்து கொள்வோம்

- மா.ஜெயந்தன்



### என்ன சொல்லப் போகிறாய்?

கோபுரத்துப் புறாக்கள் -
உன் இமை படபடப்பு
கொம்பு தேனீக்கள் - நுனி
மூக்கு வியர்வை
உதிர்ந்துவிட துடிக்குதோ-
உன் உதட்டு இதழ்கள்
இடர்படும் இசைத்தட்டாய்
தடுமாறும் வார்த்தை
விடமுண்ட கண்டனாய் -
உன் தொண்டை களம்
விடுதலை வேண்டி
விடைக்குதோ
முன்னிரு நெஞ்சகங்கள்
நிலம் தோண்டும் கால்கள்
எழுதும் துளிப்பாக்கள்
இக்கலை நுணுங்கள்
கண்டேனடி
என் காதலை சொன்ன
கணத்தில்
தேர்வு எழுதி
காத்திருக்கும்
விளம்பு நிலை
மாணவனாய்
ஏங்கி நான் தவிக்கிறேனடி
உன் ஒற்றை பதிலுக்காக
என்ன சொல்லப்
போகிறாய்??

- சீனா தானா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பொதுச் சபை உறுப்பினர்கள்

# கைதடி தெற்கு சனசமூக நிலையம்
# 53 ஆவது அகவை நாள்

கைதடியில் முதன்மையான சனசமூக நிலையங்களில் ஒன்றான கைதடி தெற்கு சனசமூகநிலையம் ஆகஸ்ட் 12 ஆம் திகதி 53 ஆவது அகவையை நிறைவு செய்கின்றது. ஆற்றல் மிக்க தலைவர்கள், நிர்வாகிகள், உறுப்பினர்களை உள்ளடக்கி 50 ஆண்டுகளுக்கும் மேலாக கைதடி மண்ணிற்கு சேவையாற்றி வரும் இந்த நிலையத்தினை அகல்விளக்கு சஞ்சிகையின் சார்பில் வாழ்த்துவதுடன் மென்மேலும் பொதுப்பணியால் முன்னேற்ற வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் இக்கட்டுரையை வரைகின்றேன்.

எங்கள் பிறந்த ஊராம் கைதடி மண்ணில் பல சனசமூக நிலையங்கள், ஆலயங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் என பல சமூக முன்னேற்ற அமைப்புக்கள் இயங்கி வந்தாலும் இவற்றிலே முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிலையமக இருப்பதும் கைதடியின் தலைநகரிலேயே அமைந்திருப்பதும் கைதடி தெற்கு சனசமூக நிலையம் ஆகும்.

தான் சார்ந்த மக்களுக்கும் சமூகத்துக்கும் அளப்பரிய பணிகளை ஆற்றிக்கொண்டிருக்கும் இந்தச் சனசமூக நிலையம் கல்வி, விளையாட்டு, கலாச்சாரம் உட்பட்ட துறைகளில் தமது மக்களை வளர்த்தெடுப்பதிலும் ஊக்குவிப்பதிலும் அதிக கவனம் செலுத்தி வருவதனை கடந்த கால வரலாறுகளிலிருந்து காணக்கூடியதாக உள்ளது. சனசமூக நிலையங்களை வாசிகசாலைகள் என்றும் அழைப்பதுண்டு. நாளாந்த மற்றும் வாராந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள் நிலையத்திலேயே வாசிப்பதற்காக வைக்கப்படுவதால் தான் இதற்கு வாசிகசாலை என்று பெயர் வந்தது போலும்- இந்தப் பெயருக்குரிய சேவையை இன்று வரையும் மிகச் சிறப்பாகவே செய்து வருகின்றது கைதடி மக்கள் மட்டுமல்ல வெளியிடங்களிலிருந்து உத்தியோக மற்றும் பிற காரணங்களுக்காக கைதடிக்கு வரும் மக்களின் பொழுதுபோக்கிற்கு உதவும் பணியில் கைதடி தெற்கு சனசமூக நிலையம் முதலிடம் வகிக்கின்றது.

கைதடியிலிருந்து வெளியிடங்களுக்கு செல்பவர்களில் பஸ் நிலையத்திற்கு அருகில் இந்த நிலையம் அமைந்திருப்பதால் பஸ் மற்றும் போக்குவரத்துக்கென தரித்து நிற்கும் அனைவருக்கும் பத்திரிகை மற்றும் சஞ்சிகைகளை வாசிக்கக்கூடிய வகையில் இந்த நிலையம் அமைந்திருப்பதால் தினந்தோறும் நூற்றுக்கணக்கான பயனாளிகள் இந்த நிலையத்திற்கு வந்து செல்கின்றனர். சில இடங்களில் பெயரளவுக்கு சனசமூக நிலைய கட்டிடங்கள் இருக்கும்.அங்கே ஆட்களுக்கு பதிலாக ஆடு, மாடுகள் தான் படுத்துறங்கும். ஆனால் கைதடி தெற்கு சனசமூக நிலையத்தில் அப்படியல்ல- நாள்தோறும் நிலைய மண்டபம் துப்பரவு செய்யப்பட்டு பத்திரிகைகள் மேசைகளில் நேர்த்தியாக வைக்கப்பட்டிருக்கும்.- நிலைய சுவர்களிலே நிலையத்தின் பணிகளை பறைசாற்றும் புகைப்படங்கள் அழகாக வைக்கப்பட்டிருக்கும். மக்கள் மற்றும் வாகனங்கள் அதிகமாக நடமாடும் பகுதியாக இருந்தாலும் அமைதியான சூழலாகவே எப்போதும் நிலையப்பகுதி காணப்படுவதால் அமைதியாக உட்கார்து வாசிப்பதற்கு வளமான இடமாக கைதடி தெற்கு சனசமூக நிலைய சூழல் அமைந்திருப்பது சுட்டிக்காட்டத்தக்கது.

வாசிகசாலைப் பணிகளுடன் மட்டும் நின்றுவிடாது மின்னொளி நாடக மன்றம், மின்னொளி விளையாட்டுக் கழகம், கைதடி தெற்கு மாதர்கிராம அபிவிருத்திச் சங்கம், மின்னொளி சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம், கைதடி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம், கைதடி தெற்கு ஜெனி அறவழி மழலைகள் கல்விப் பூங்கா என நிலையத்தின் பணிகள் மேலும் மேலும் விரிவடைந்து செல்கின்றது.

1970 களின் ஆரம்பத்தில் நாங்கள் சிறுவர்களாக இருந்த காலத்தில் தலைவர் என்ற வார்த்தையின் அர்த்தத்தை புரிந்து கொள்ளும் வகையில் செயற்பட்டவர் கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் தலைவர் திரு.வே.கதிரேசன். 1972 இல் அவர் தலைவராக தெரிவு செய்யப்பட்டபோது செயலாளராக சீ.சந்திரனும் பொருளாளராக க. சிவஞானமும் தெரிவு செய்யப்பட்டு நிலையத்தின் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டன. அன்று முதல் இன்று வரையும் இவர்கள் சமூகப் பணியிலிருந்து ஓய்ந்துவிடவில்லை. குறிப்பாக வே. கதிரேசன் அவர்களை தலைவர் என்று தான் இன்று வரையும்அழைக்கின்றார்கள். அவரது பெயரை விட தலைவர் என்றால் தான் கைதடியிலுள்ளவர்களுக்கு புரியும். இன்று இவர் இந்த நிலையத்தின் போஷகராக இருப்பதாக அறிகின்றோம்.

அவர் தலைவர் பதவியிலிருந்து விடுபட்ட நாளிலிருந்து இன்று வரையும் போஷகராகத் தான் இருக்கின்றார் என்பதனைஅறிகின்றபோது அவருக்கு இந்த நிலையத்தின் அங்கத்தவர்கள் அனைவரும் வழங்குகின்ற மரியாதை, கௌரவத்தினை எண்ணிப் பார்க்கும் பொழுது உண்மையிலேயே மகிழ்ச்சியாகத் தானிருக்கின்றது.

அன்றைய தலைவர் மட்டுமல்ல செயலாளர் சி.சந்திரன் அவர்கள் இன்றும் இளைஞர்களுடன் இணைந்து பல பணிகளை ஆற்றி வருகின்றார். கைதடி தெற்கு மின்னொளி நாடக மன்றத்திற்கு பல நாடகங்களை எழுதி இயக்குனராக நடிகராக என பல மட்டங்களில் செயற்பட்டு இருக்கின்றார். இவர் எழுதிய 'மதனா' என்னும் நாடகம் ஒரு காலத்தில் யாழ்.மாவட்டத்தில் பல மேடைகளை கண்ட நாடகமாகத் திகழ்ந்தது. அப்பொழுது நாடகத்துறையில் பெரும் கலக்கு கலக்கிய கோண்டாவில் ஸ்ரீ வாகீஸ்வரி சனசமூக நிலையத்தில் அலாவுதீன், அளவெட்டி 'வடக்கும் தெற்கும்' போன்ற நாடகங்களுக்கு நிகராக 'மதனா'அமைந்திருந்தமை

(6 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சை விட்டகலா நினைவலைகள்



திருமதி பாக்கியம் துரைசிங்கம்
(பாரதிபுரம், திருநெல்வேலி)
மலர்வு 12.06.1940 உதிர்வு 20.06.2008

விஞ்சு மிகு அன்புடனே
தஞ்சமளித்து எங்களுக்கு
அடைக்கலம் அளித்த அம்மா
நெஞ்சை விட்டு அகலாத
நினைவுகளை தந்துவிட்டு
சென்று விட்டீர்களே
தவியாய் தவிக்கின்றோம் தாயே...
உங்கள் ஆத்மா சாந்தியடைக...

பிரிவுத்துயரில்
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்- ஜெர்மனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இனிய தமிழே!

'மொழிக்கெல்லாம் முது மொழியாம்' என்றும் ' கல்தோன்றா மண்தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய முதுமொழி' என்றும் 'தமிழுக்கு அமுதென்று பேர்' என்றும் பல சான்றோர் எமக்குத் தமிழின் பெருமையை நயம்படக் கூறுகின்றனர்.'தமிழ்' என்ற சொல்லிலே என்ன ஒரு இனிமை, தெய்வீகத்தன்மை, தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட நாம் அனைவரும் பெரும் பேறு பெற்றவர்கள் என்பது உண்மை.

இத்தகைய புகழ் பூத்த தமிழைப் பேணி வளர்ப்பதற்கென பற்பல மகான்கள் இவ்வுலகில் தோன்றி சிலர் மறைந்தும் பலர் எம்மவர் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். பொய்ய மொழிப் புலவரான திருவள்ளுவர் தனது உலகப் பொதுமறையான திருக்குறள் மூலம் தமிழை உலகளாவிய ரீதியில் பரப்பினார். மகாகவி சுப்பிரமணிய பாரதியார்'வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி வாழியவே வாழியவே' என்று வையம் புகழும் தமிழ் மொழியை வாழ்த்தியுள்ளார்.இது மட்டுமா? எம் இலங்கைத் திருநாட்டின் வடபாலும் கிழக்குத் திசையாலும் அமைந்துள்ள மாவட்டங்களிலும் பற்பல தமிழ் அறிஞர்கள் மறைந்தும் வாழ்ந்து கொண்டும் இருக்கின்றார்கள். விபுலானந்த அடிகளார், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், நவாலியூர் சோமசுந்தரப் புலவர் போன்றோர் அவர்களிற் சிலர்.

இவ்வாறு பாதுகாக்கப்பட்டு வந்த தமிழ் மொழியின் பெருமை தற்போது குன்றி வருகின்றது என்பது கவலைக்குரிய விடயம். தமிழ் பேசுவதனால் தம் மதிப்புக் குறைந்துவிடும் என நம் சமூகதில் சிலர் நினைப்பதுண்டு. இந்த நிலை மாறவேண்டும்.'தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா' என்ற வாக்கு நிஜமாக வேண்டும். தமிழின் பெருமை உலகெல்லாம் ஓங்கி ஒலிக்க வேண்டும். தமிழர்களாகிய நாம் தமிழன்னையைப் புகழால் அழகுபடுத்தவேண்டும்.

'சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத் துலங்குக வையகமே'

சஜீவா ஜெயக்குமார்
கைதடி தெற்கு சனசமூக நிலையம்

## தூசு பொசுக்கிய பூகம்ப பயணம்

நாய்க்கு
அலுவலுமில்லை
நடக்க நேரமுமில்லை
என்பது போல்
இருக்க நேரமுமில்லை
தலைமுட்ட
அலுவலுமில்லா
அலைச்சலாய்...
கூட்டிக்கழித்துப்
பார்த்தால்
சூரிய வெப்பத்தில்
கரைந்து போன
பனிக்கட்டியாய்
எல்லாம்
பூகம்ப கொதிப்பில்
பொசுங்கிப் போன
தூசாய்
எதுவித பதிவுமில்லா
பயணம்-

- வா.வி.பாஸ்கர்



## காதல் பிரிவு

கானகத்து கரையினிலே
கன்னியவள்
வாடுகின்றாள்
துயர்தீர்க்க யாருமில்லை
கவலையிலே
சோருகின்றாள்
சிறகிழந்த பறவையாய்
வாழ்வு சிதைந்து போய்
நிற்கிறாள்
காதல் பிரிவின்
வேதனையால்
வாழ்வின் விளிம்புக்கே
வந்துவிட்டாள்
காதலித்தவன்
கைப்பிடிக்காமல்
கால்வாரிவிட்ட சேதி
காதில் கிடைத்தது
முதல்
கலங்கிப் போய்
விட்டாளே
கைகொடுக்க
எவருமில்லை
கவலை தீர்க்க
வழியுமில்லை
விழி வழியும் கண்ணீர்
வெள்ளம்
வழி சொல்ல வகை
தருமா?

- ப.றொஜின்

### கைதடி தெற்கு (4ம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிடத்தக்கது.

இவர்கள் மட்டுமல்ல அன்றைய பொருளாளர் திரு. க.சிவஞானம் பொருளாளராக மட்டுமல்ல தலைவராக நிலையத்தினை வழி நடத்தும் நல்லாசானாக பல பாத்திரங்களை தாங்கி கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் மூலம் மக்களுக்கு பணியாற்றி வருகின்றார்.இவர் ஆரம்பகால நிர்வாகிகளில் ஒருவராக இருந்தாலும் நாடகங்கள் மூலமும் மக்களுக்கு முதலில் அடையாளம் காணப்பட்டார். தொண்டு உள்ளமும் நற்சிந்தனையும் உடைய இவருடைய அங்கத்துவம் நிலையத்துக்கு கிடைத்திருப்பது சிறப்பானதாக கருதப்படுகின்றது.

இந்த நிலையத்தின் ஆரம்பகாலம் எப்படியிருநதது என்பது பற்றி திரு.சிவஞானம் அவர்கள் கூறுகையில்:-

'எமக்கு முன்னோடியாக இருந்த திரு.வல்லி ஸ்ரீ பத்மநாதன் அவர்கள் எம்மில் பலரை தன்னுடன் இணைத்து 1962 ஆம் ஆண்டு இளைஞர் முன்னேற்ற கழகம் என்ற பெயரில் திரு.ந.கிருஷ்ணன் அவர்களின் காணியில் ஒரு நிர்வாகத்தை அமைத்தார். அப்பொழுதே மின்னொளி நாடக மன்றத்தையும் இயக்கினோம். திரு.சு.சின்னண்ணா அவர்களின் நெறியாள்கையில் நம்பிக்கைத் துரோகி, தேசத்துரோகி என நாடகங்களை உருவாக்கி மேடையேற்றினோம்.நாடக செலவினங்களுக்கு திரு.க.பொன்னன் அவர்கள் உதவி செய்து ஊக்கப்படுத்தினார். நாடக மன்றம் சிறப்புற விளங்கினாலும் கழகம் இயங்க முடியாத நிலைக்கு வந்தபோது திரு. வே. கதிரேசன் அவர்கள் முன்னின்று எம்மில் பலரை தன்னுடன் இணைத்து புது உற்சாகத்துடன் 1969 ஆம் ஆண்டு கைதடிச் சந்தியிலுள்ள அண்ணமார் கோவிலில் மீண்டும் கழகத்தை அங்குரார்ப்பணம் செய்தோம். இக்கழகமானது கைதடிச் சந்தியிலுள்ள திரு.சு.நாகன் அவர்களின் இல்லத்தில் இயங்கி வந்தது. பின்பு கழகத்தை மின்னொளி சனசமூக நிலையமாக பெயர் மாற்றம் செய்து பதிவு செய்தோம். நிலையத்திற்கு நிலையான இடம் கிடைக்காமையினால் 1971 ஆம் ஆண்டு கைதடி தெற்கு சனசமூக நிலையத்துடன் இணைந்து கொண்டோம் என்று நிலையத்தின் ஆரம்பத்தைப் பற்றி தெரிவித்தார்.

திருவாளர்கள் கதிரேசன், சி.சந்திரன், க. சிவஞானம் ஆகியோர் மட்டுமல்ல அவர்களுடன் கூட இருந்தவர்களும் இவர்களுக்கு பின்னால் வந்தவர்களும் என பலர் கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் வளர்ச்சிப் பணியில் பல்வேறு காலகட்டங்களில் செயற்பட்டிருக்கின்றார்கள்.

அமரர்கள் சின்சின்னப்பு, க. கிருஷ்ணன்,க.செல்வராசா (செல்வம்), சி.பரமசாமி, திருவாளர்கள் சி.வே. சின்னத்தம்பி, கந்தஞானமுத்து, வே. கந்தசாமி, வே. செல்வராசா, இ.இராசையா, அமரர் இ.வீரசிங்கம், சி.தங்கராசா , எஸ்.கதிரன்,வி.இராசேந்திரம், மா.மகேஸ்வரன், துரை, எஸ்.சின்னத்துரை ச.நளினி, வா. சின்னத்தம்பி, இ.கந்தசாமி,சி.பரமேஸ்வரன், க. சின்னத்தம்பி, ச.ஜெயக்குமார் (எஸ்ஜி), கு.குலேந்திரன், ப. விஜயகுமார், மு.கலானந்தன், க.உதயரதன், த.காண்டீபன பூ.குணலிங்கம், பூ.தர்மலிங்கம், கு.இராசேந்திரம், சு.மகாலிங்கம், சு.குணலிங்கம் போன்றவர்களின் செயற்பாடுகள் போற்றப்பட வேண்டிய வையே. மக்கள் பணிக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் இவர்கள் அனைவரையும் 53 ஆவது அகவை நாளில் அகல்விளக்கு சார்பில் கௌரவப்படுத்துகின்றோம்.

இவர்களில் மா.மகேஸ்வரன் ஓவியத்துறையிலும் எஸ்.சின்னத்துரை அவர்கள் பாரம்பரிய கலைத்துறையிலும் சாதனையாளர்களாக விளங்கும் அதேவேளை அமரர் இ.வீரசிங்கம் நடிப்புத்துறையில் சிறந்த கலைஞராக விளங்கியமை குறிப்பிடத்தக்கது. இவர்களைப் போன்று பலர் கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் புகழ் பூத்த வரலாற்றிலே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். அவர்களையெல்லாம் வரிசைப்படுத்தி நிலையத்தின் பரிணாம வளர்ச்சியையும் அதன் பணிகளைப் பற்றியும் விரிவாக எழுதவேண்டும் பிறிதொரு நாளில் இது சாத்தியமாகும் என்று நம்புகின்றேன்.

கைதடி மகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




என் இனிய கிராமமே
நலமா?
பக்கத்து வீட்டு பொன்னம்மாவும் அன்னம்மாவும்
ஊர் உறவெல்லாம்
உனைச் சுற்றியிருக்கும்
நீர்வளமும் நிலவளமும்
நலந்தானே
ஓங்கி வளர்ந்து நிற்கும்
பனை, தென்னை, மா, பலா எல்லாம்
நீ தந்த கொடை தானே
பூவரசும் ஆலரசும்
வேம்பு, மஞ்சமுண்ணா... இலந்தை
புளியுடன்
கதிரணியில் காய்த்துக் குலுங்கும்
விளாத்தி மரமும் நலமா?
தோட்ட மண்ணிலே இன்று
களையெடுக்கும்
தத்துப்புளினியும் செண்பகம் மாமியும்
பாலக்காட்டுக்குள் பதுங்கியிருக்கும்
ஆக்காட்டுக் குருவியும்.. கௌதாரியும்
என்னை மறந்துவிட்டார்களா,?
தாழைக்குள் கூடு கட்டும்
மாடப் புறாவும் மணிப்புறாவும்
கொண்டைக்காடு மயிந்தி கொல்லை என
பறந்து பறந்து வீடு கட்டும்
தூக்கணாங்குருவியும்
எப்படியிருக்கின்றன.

இவையெல்லாம்
அங்கு பொழியும்
ஷெல் மழையிலும்
கந்தக காற்றிலும்
வாழப் பழகிவிட்டார்களா?
அல்லது
வாழ்விழந்து போனார்களா?
யானறியேன் பராபரமே....

செம்பருத்தி,குயில், காக்கை
பச்சைக்கிளி மைனாவுடன்
நம் வீட்டில் வாழும்
கோழி, ஆடு, மாடு, பூனை என
வீட்டை காக்கும்
"வீமன்" நாயும் நலமா?

ஆவரசே, பூவரசே வீட்டு
வேலியாயிருக்கும்
அலம்பல் மரமே
நீங்கள் எல்லோரும்
ஏன் என்னை மறந்துவிட்டீர்கள்


கால் பந்தாடிய கல்லாகம் தரவையும்
கைப்பந்து,சடுகுடு,கிளித்தட்டு,கிரிக்கட் என
என் கால்பட்ட இடங்களை
நினைத்துப் பார்க்கிறேன்
சாமிகடையடி, தெருவடி மதவடி, வாசிகசாலையடி எல்லாம்
நண்பர்கள் புடைசூழ
அரட்டை அடித்து திரிந்த அந்த
நாட்களெல்லாம்
ஊரின் நினைவுகளாய்
வந்து தினமும் என்னை வாட்டுவதை
எப்படிச் சொல்ல...

அன்னையின் கருவறையில்
எனக்கும் ஓர் இடம் கொடுத்து
எம்மையெல்லாம் தாங்கி நிற்கும்
சுமைதாங்கியே
இனிய கிராமமே
விரைவில் வருவேன் உன்னிடம்
அந்த இனிய நாட்களை
நினைவூட்டி மகிழும்
நாளுக்காய் காத்திருக்கின்றேன்

பாரிஸ் ஆனந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிணறு



"எங்கட ஊரில நல்ல தண்ணீர் கிணறு வெட்டிக் கட்டுவதற்கு காசு ஒதுக்கியிருக்கின்றார்கள். இதனை எப்படி வெட்டுறது கட்டுவது என்பது பற்றி முடிவு செய்யவேண்டும்" என்று கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் அன்றைய கூட்டத்தில் கூடியுள்ளவர்களுக்கு தெரிவித்தார்.

சேவாவத்தை குடியேற்றத் திட்டத்தில் உள்ள அரச காணியில் இந்த கிணறு வெட்டுவதற்கான ஏற்பாடுகளை சங்கத்தினர் கவனித்துக் கொண்டிருக்கின்றார்கள். கிணறு வெட்டுவதற்கான நாள் அதற்கான நிதி போன்ற விடயங்கள் தொடர்பான தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

ஏற்கனவே இவ்வாறு ஒரு கிணறு அமைப்பதற்கு சங்கத்து கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட போது அதனை எங்கு அமைப்பது என்று அங்கத்தவர்கள் இடையிலான வாதப்பிரதிவாதங்களினால் அதற்கு ஒதுக்கப்பட்ட நிதியே வாபஸானதால் இந்த முறை எப்படியும் கிராமத்தில் கிணறு அமைத்தே தீருவது என்பதில் எல்லோரும் உறுதியாக இருந்தனர்.

சேவாவத்தை திட்ட கிணறு அமைக்கும் வேலைகள் பற்றியும் அதற்கு நிதி ஒதுக்கியது பற்றியும் அறிந்து பக்கத்துக் கிராமமான தோப்பு மக்கள் பொறாமைப்பட்டனர். அபிவிருத்தி வேலைகளுக்கு அரசாங்கம் பணம் ஒதுக்கினால் எமது பகுதிக்குத் தானே முதலில் வரவேண்டும் எப்படி அவங்களுக்கு போனது என பல கோணங்களிலும் ஆராயத் தொடங்கினார்கள்.

எப்படியும் இந்த நிதியை இவங்கட்ட இருந்து பிரிக்கவேண்டும். திட்டம் போட்டார்கள். அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீட்டுக்கு பொறுப்பான அதிகாரிகளை அடையாளங் கண்டு தங்களுடைய தோப்பு கிராமத்துககு அழைத்து ஆடு வெட்டி விருந்து வைத்து சேவாவத்தை கிராமம் பற்றி இல்லாதது பொல்லாததுகளை கூறியதுடன் அவற்றை எழுத்து மூலம் சமர்ப்பித்தார்கள்.

சேவாவத்தையில் ஒவ்வொரு வீட்டிலும் குடி தண்ணீர் கிணறு இருக்கின்றது. வீட்டுக்கு ஒருவர் வெளிநாட்டில் இருக்கின்றார்கள். அங்கு இந்த கிணற்றினை அமைப்பது வீண்வேலை என்றெல்லாம் கூறி அதிகாரிகளின் மனதை மாற்றினார்கள்.

இதனை அறிந்து கொண்ட சேவாவத்தை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் தோப்பு கிராம தலைவர் மற்றும் சம்பந்தப்பட்டவர்களை அவர்களது இல்லங்களுக்கு சென்று தனித்தனியாக எச்சரித்ததுடன் எமக்கான நிதி ஒதுக்கீடு நிறுத்தப்பட்டால் விளைவுகள் பாரதூரமானவையாக இருக்கும் என எச்சரித்தார்.

சேவாவத்தை கிராம மக்கள் போர்க்குணம் கொண்டவர்கள். பிரச்னை என்றால் அடிதடி என்று போய்விடுவார்கள் என்பது தோப்பு கிராமத்தினருக்கு நன்கு தெரியும். இதனால் தம்மைச் சந்தித்த தலைவரிடம் தாங்கள் அப்படிச் செய்யவில்லை என்று சமாளித்தனர். இதனை ஏற்றுக்கொள்ளாத தலைவர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அலுவலகத்திற்கு சென்று குறிப்பிட்ட அதிகாரிகளைச் சந்தித்து நிலைமைகளை விளக்கியதுடன் அன்று விருந்துண்ட அதிகாரிகளுடன் காரசாரமாக விவாதித்த

சேவாவத்தை குடியேற்றத் திட்டத்துக்கு என நல்ல குடிதண்ணீர் திட்டம் ஏற்கனவே நடைமுறையில் இருப்பதாகவும் அது என்றோ ஒரு நாள் நிறைவேற்றப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். இதனை நிராகரித்த தலைவர் அது வரும்போது பார்த்துக் கொள்ளலாம்.இப்போது கிணறு அமைப்பது முக்கியம் என்று வாதிட்டார்.

இப்படியான சூழலில்"கிணறு" அமைப்பது இழுபறிப்பட்டுக் கொண்டிருக்க அந்த ஆண்டு இடம்பெற்ற பாரிய இடப்பெயர்வின்போது முழுக்கிராமமே இடம் பெயர்ந்து போக "கிணறு" திட்டமும் கிடப்பில் போடப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனையாளர் செல்லக்கண்டு

கல்வி, கலை, இலக்கியம், விளையாட்டு உள்ளிட்ட பல துறைகளில் எங்கள் கிராமத்திலும் சாதனை படைத்தவர்கள் வெற்றிக்கனிகளை பறித்து எமது ஊருக்கும் உறவுகளுக்கும் பெருமைகளை பெற்று தந்தவர்கள், தந்து கொண்டிருப்பவர்கள் இன்றும் வாழ்ந்து கொண்டு தான் இருக்கின்றார்கள். அந்த வகையில் துவிச்சக்கர வண்டி ஓட்டப் போட்டியில் ஒரு காலத்தில் கொடிகட்டிப் பறந்தவர் தான் எங்கள் கிராமத்தைச் சேர்ந்த வா.செல்லக்கண்டு அவர்கள். தமது இளமைக்காலம் தொட்டே கலை விளையாட் டுத துறைகளில் ஆர்வத்துடனும் மிக ஈடுபாட்டுடனும் செயற்பட்டு வரும் ஒரு பல்துறை செயற்பாட்டாளர் திரு. செல்லக்கண்டு என்றால் அது மிகையல்ல.

சைக்கிள் ஓட்டப் போட்டியில் 1970 களிலிருந்து அவர் படைத்து வந்த சாதனைகள் ஏராளம்... ஏராளம். இந்த சாதனைகள் குறித்து நாம் பட்டியலிட்டுப் பார்த்தபோது அவை எண்ணுக்கணக்கற்றதாகவே காணப்படுகின்றது. இவை பற்றிய சரியான பதிவுகள் எதுவும் இல்லாமையினால் கணக்கிட முடியாமலிருக்கின்றது. இது தொடர்பாக அவரிடமும் சரியான பதிவுகள் இல்லை. இவை எல்லாவற்றுக்கும் அடையாளமாக இருந்த சான்றிதழ்கள், பரிசுப்பொருட்கள். இவை எதுவும் அவரிடம் தற்போது இல்லையென்று கையை விரித்தார்.

தாயகத்தில் நிலவும் யுத்த நிலையினால் தொடர்ச்சியாக ஏற்பட்ட இடம்பெயர்வுகளினால் அவர் தாயகத்தினை விட்டு ஐரோப்பாவுக்கு புலம்பெயர்ந்தமையினால் இந்த சான்றிதழ்கள் பரிசுப்பொருட்கள் யாவற்றையுமே இழந்து விட்டார். எனக்கு நல்ல ஞாபகமிருக்கின்றது தனது பரிசுப் பொருள்களையும் சான்றிதழ்களையும் வைத்திருப்பதற்கென கைதடி மத்தியிலுள்ள அவரது வீட்டில் ஒரு இடத்தினை ஒதுக்கி வைத்திருந்தார். - அங்கே அவ்வப்போது சைக்கிளோட்டப் போட்டியில் அவர் பெறும் விருதுகள் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும். அதனை செல்லக்கண்டுவின் சாதனை காட்சியறை என்று நாங்கள் அப்பொழுது அழைத்துக் கொள்வதுண்டு. விதம் விதமான புத்தம் புதிய சைக்கிள்கள், வெற்றிக் கிண்ணங்கள் என பல விருதுகள் அங்கே காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும்.அத்துடன் அவருக்கு வழங்கப்படுகின்ற சான்றிதழ்களும் பிறேம் போடப்பட்டு வைக்கப்பட்டிருக்கும். இந்தக் காட்சியறையினை பார்ப்பதற்கு மகிழ்ச்சியாகவே இருக்கும். ஒரு தனிமனிதனின் சாதனையா இது என்று பார்ப்பவர்கள் வியப்படைந்து போவார்கள்.

எந்த ஒரு பின்புலமும் இன்றி எவருடைய ஒத்துழைப்பும் இன்றி ஒரு தனிமனிதனாக நின்று சைக்கிள் ஓட்டத்துறையில் சாதனைகளை படைத்தவர் திரு.செல்லக்கண்டு. கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் சாதாரண அங்கத்தவராக இருந்து அன்றைய காலத்தில் சனசமூக நிலையங்கள் நடத்துகின்ற சைக்கிள் ஓட்ட போட்டி மற்றும் கலைத்துறைப் போட்டிகளில் தானாகவே பங்கு பற்றி தன்னைத் தானே வளர்த்துக் கொண்டவர் அவர். விளையாட்டுத் துறையில் மட்டுமல்ல பாடல்கள் பாடுவதிலும் வல்லவர். நாடகத்தில் சிறந்த நடிகர் என தாயகத்தில் பாராட் டுக்களை பெற்ற அவர் ஐரோப்பிய மண்ணிலும் தனது ஆற்றலை வெளிப்படுத்தி வருகின்றார்.

தற்பொழுது பாரிஸில் வசித்து வரும் அவர் மேடை நிகழ்ச்சிகளில் பாடல்கள் பாடி தனது இனிமையான குரல் மூலம் மக்களை கவர்ந்து வருகின்றார். ஐபிசி வானொலி நடத்திய இன்னிசைக்குரல் போட்டியிலும் அவர் ஒரு தடவை முதலாவது இடத்தைத் தட்டிக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. சைக்கிள் ஓட்டத்துறையில் இருந்து தற்பொழுது விடுபட்டாலும் இசைத்துறையில் அவர் தொடர்ந்து துலங்கிக் கொண்டிருக்கின்றார்.

தாயக மேடைகளில் அவர் தோன்றும்பொழுது 'சுயநலம் பெரிதா பொதுநலம் பெரிதா?' என்ற பாடலை நிச்சயம் பாடி ரசிகர்களிடம் பாராட்டுக்களைப் பெறுவார்.இது போன்ற பல பழைய பாடல்களை குறிப்பாக தத்துவப் பாடல்களை பாடுவதில் அவருக்கு நிகர் எவருமில்லை. பழையவை மட்டுமல்ல புதிய பாடல்களையும் அதன் சரணம் தப்பாமல் பாடும் வல்லமையும் அவரிடமுண்டு. அண்மையில் பாரிஸ் மேடை ஒன்றில் அவர் பாடிய 'தவமாய் தவமிருந்து' படத்தில் இடம்பெற்ற 'ஒரேயொரு ஊருக்குள்ளே ஒரே ஒரு அம்மா அப்பா' என்ற பாடல் பலரின் பாராட்டுக்களைப் பெற்றது. அவர் மேடையில் பாடுகின்ற போது அவரது வாயசைவும் உடல் மொழியும் ரசிகர்களை வசீகரிக்கச் செய்ததை நேரில் பார்த்தால் புரிந்து கொள்ள முடியும். பாடிய பின்னர் மேடையை விட்டு அவர் இறங்கியதும் கைலாகு கொடுத்து தங்கள் பாராட்டுக்களை தெரிவிப்பவர்கள் 'செல்லக்கண்டு இன்னுமொரு பாட்டுப் பாடுங்கள்' என்று கூறி அந்தப் பாடலை சுட்டிக்காட்டி அவரை ஊக்குவிப்பதை நேரிலே பார்த்திருக்கின்றோம்.

இசைத்துறையில் மட்டுமல்ல நாடகத்துறையும் அவருக்கு கைவந்த கலையாகும். தாயகத்தில் சரஸ்வதி சனசமூக நிலைய நாடக சபாவில் முன்னணி நடிகர்களில் திரு.செல்லக் கண்டுவும் ஒருவராவார். வில்லன் நடிகராகவும் குணச்சித்திர நடிகராகவும் பல்வேறுபட்ட பாத்திரங்களை ஏற்று தன்னிடமிருந்த நடிப்புத் திறனை வெளிப்படுத்தியவர் அவர். ஆண்வேடம் மட்டுமல்ல பெண் வேடமேற்றும் சிறப்பாக நடித்தவர் அவர். கைதடி மேற்கு சனசமூக நிலையத்தின் தலைவராகவும் விளையாட்டுத்துறை வீரராகவும் இருந்த காரணத்தினால் சமுதாயத்துக்கு சேவை செய்வதிலும் சமூக சேவையாளராக செயற்பட்டவர் என்பது குறிப்பிடத் தக்கது. தாம் வாழும் சமூகத்துக்கும் மக்களுக்கும் தொண்டு செய்யும் உயரிய நோக்குடன் பிரான்ஸ் - கைதடி அபிவிருத்திக் கழகம் ஊடாக கிராமத்துப் பணிகளுக்கு அவர் உதவி வருகின்றார்.

திறமையும் ஆற்றல்களும் மிக்க செல்லக்கண்டு அவர்களுடைய ஆரம்ப காலத்தை நினைவூட்டுகின்றபோது 1970 களில் சரஸ்வதி சனசமூக நிலைய ஆண்டுவிழா நிகழ்ச்சிகளில் நடத்தப்பட்ட சைக்கிள் ஓட்டப் போட்டி ஒன்றில் தான் அவர் முதலாமிடத்துக்கு வந்தார் என்பதை நினைத்துப் பார்க்கின்றேன்.

25 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டியில் 50 க்கும் மேற்பட்ட வீரர்கள் கலந்து கொண்டிருக்கின்றார்கள். சைக்கிள் ஓட்டப் போட்டிக்கு முன்னதாக மரதன் போட்டி நடைபெற்றது. மரதன் ஓட்டம் முடிவிடத்துக்கு வந்து கொண்டிருந்தது அப்பொழுது அறிவிப்பாளராக வாகனத்தில் வந்து கொண்டிருந்த வெள்ளைச் சின்னையா அவர்கள் தனது கணீரென்ற குரலில் மரதன் ஓட்டத்தில் முதலாவது வீரராக 'எங்கள் தம்பித்துரை வந்து கொண்டிருக்கின்றார்' என்று அறிவித்தபொழுது நிகழ்வினைப் பார்த்துக் கொண்டிருந்த அனைவரின் கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் வெள்ளம் கரை புரண்டதுடன் எல்லோரும் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தார்கள். இதனைத் தொடர்ந்து அடுத்து சைக்கிள் ஓட்ட வீரர்கள் வந்து கொண்டிருந்தார்கள். சைக்கிள் ஓட்ட முடிவும் வீரர்கள் முடிவிடத்துக்கு வருவதற்கு முன்னரே 'எங்கள் செல்லக்கண்டு முதலாவதாக வந்து கொண்டிருக்கின்றார்' என்று வெள்ளைச் சின்னையாவின் குரல் மகிழ்ச்சியுடன் ஒலித்தது. நம்மவர்களின் குதூகலிப்பும் மகிழ்ச்சி ஆரவாரமும் கரகோஷமும் வானைப் பிளந்தது.

அன்று தொடங்கிய வெற்றியை செல்லக்கண்டு ஐரோப்பா வரும் வரையும் தக்கவைத்துக் கொண்டார். செல்லக் கண்டுவின் சாதனையை தொடர்ந்து சைக்கிள் ஓட்டத் துறையில் நுழைந்த சி.மனோகரன், க.பரமேஸ்வரன் உட்பட்ட பலர் தொடர்ந்து போட்டிகளில் கலந்து கொண்டபோதும் இன்று வரையும் சாதனை வீரராக க.பரமேஸ்வரன் திகழ்ந்து கொண்டிருக்கின்றார். அவர் தற்பொழுது கார் ஓட்டப் போட்டியில் அகில இலங்கையிலும் முதன்மை பெற்ற வீரராக இலங்கையிலுள்ள கார் ஓட்ட வீரர்களுக்கு சிம்ம சொப்பனமாக திகழ்ந்து கொண்டிருக்கின்றார்.

சைக்கிள் ஓட்டத்துறையில் தமது 21 ஆவது வயது தொடக்கம் 37 ஆவது வயதுவரை தொடர்ந்து பதினைந்து ஆண்டுகள் சாதனை படைத்த செல்லக்கண்டு நாட்டின் யுத்த சூழலினால் தொடர்நது இந்த துறையில் நின்று நிலைக்க முடியவில்லை என்பது பெரும் கவலையாக இருக்கின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குணாவின் குறிப்புக்கள்

தாயக மண்ணின் அனர்த்தங்கள் அந்நிய மண்ணில் எம்மவர்களின் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தும் நிலையில் காலம் கரைகின்றது. அவசர அவசியமான வாழ்வில் வாசிப்ப தற்கான நேரம் குறைந்த வேளையிலும் அகல் விளக்கு இரண்டாவது இதழ் வெளியானபோது பலர் ஆர்வமாகப் பெற்றுக் கொண்ட நிகழ்வானது எம்மவர்களிடையே வாசித்தல் இதன் வழி இரசித்தல் என வளர்ச்சியடையும் என எண்ணுகின்றேன்.

இப்பக்கத்தின் வாயிலாக நாம் நடந்து வந்த பாதையிலும் கடந்து வந்த காலங்களிலும் என் மனதில் பதிந்த நிகழ்வுகள் ஊடாக சில விடயங்களை அலசும் சிறு முயற்சி என்று கடந்த இதழில் குறிப்பிட்டிருந்தேன். அந்த வகையில் கிராமங்களின் வளர்ச்சியில் கல்வியின் அவசியம் பற்றிக் குறிப்பிடலாம் என எண்ணுகின்றேன் இளமையில் கல், இளமையில் கல்வி சிலையில் எழுத்து, கண்ணுடையோர் கற்றவரே மற்றவரெல்லாம் இரண்டு புண் உடையோர் என கல்வியின் மேன்மை பற்றி பல விதமாக எம்முன்னவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

1981 இல் எமது கிராமத்தில் நடைபெற்ற நவராத்திரி விழாவில் கல்வி, செல்வம், வீரம் இதில் மிகவும் சிறந்தது எது? என்ற பட்டி மன்றம் இடம் பெற்றது. இதில் கல்விக்காக நானும் செல்வத்திற்காக திரு.சி. சிவலிங்கம், வீரத்திற்காக திரு.கே. துரைசிங்கம் வாதங்களை முன் வைத்தோம். மன்னருக்கு தன் நாட்டில் தான் சிறப்பு. கற்றவர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்ற அடிப்படையில் எனது வாதங்களை முன் வைத்தேன். நடுவராக இருந்து தீர்ப் வழங்கிய திரு.ச. தங்கராஜா அவர்கள் கல்வியில் சிறப்புற்று இருக்கும் இவரது வாதங்கள் அடிப்படையில் கல்வியே மேலானது என குறிப்பிட்டார்.

ஈழத்தமிழ் மக்களின் வரலாற்றை திரும்பிப் பார்த்தால் கல்விச் செல்வத்திற்காகவும் பொருள் வளத்திற்காகவும் தேசத்தைக் கடந்து பிற நாடுகளுக்குச் சென்றவர்கள் பலர். இதில் பிரித்தானியாவுக்கு சென்றவர்கள் கல்வியே நோக்கமாக பயணங்களை மேற்கொண்டனர். இந்த வகையில் எமது தேசத்தில் யுத்தமேகங்கள் சூழ்ந்த பின்னாலான காலங்களில் பலர் புலம்பெயர்ந்து அந்நிய நாடுகள் பலவற்றில் பல வித செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாலும் அந்நிய மொழிகளைக் கற்று அதன் வழி வேலை, வேறு வித செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

கற்றவர்களுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்ற பதம் எமது தேசத்தில் கல்வியில் மேன்மை பெற்றிருந்தவர்கள். சிறப்பு பெறும் வகையில் அவர்களை துறைசார்ந்து மேன்மை அடையச் செய்யும் நிலையிலும் எமது நாட்டில் வாழ்ந்த காலங்களில் தாம் சார்ந்த கிராம வளர்ச்சியில் செயற்பட்டவர்கள் அந்த வகையில் பிற நாடுகளில் வசித்துக் கொண்டு அவல நிலையில் வாழும் எம்மவர்களின் கல்வி, பொருளாதார மேம்பாட்டிற்காக தங்களது பங்களிப்பை செய்வற்கு கற்ற கல்வியும் பலருக்கு பல வழிகளில் பிரயோசனமாக இருக்கின்றது என்றால் மிகையாகாது

பகிர்தல் தொடரும்

குணா- கலைதாஸ்

# பிரான்ஸ் ஒன்றுகூடல் ஒற்றுமையின் அடையாளம்

பிரான்சிலுள்ள கைதடி அபிவிருத்திக் கழகத்தின் வருடாந்த ஒன்று கூடல் யூன் 2008 1 ஆம் திகதி La Courneuve, Paroisse மண்டபத்தில் கழக தலைவர் திரு.சி.தங்கத்துரை தலைமையில் நடைபெற்றது. அமைதிப் பிரார்த்தனையுடன் ஆரம்பமான நிகழ்வில் பிரான்சில் வாழும் கைதடி உறவுகள் கலந்து கொண்டு தமது ஒற்றுமையின் அடையாளத்தை வெளிப்படுத்தினர்.

தலைமையுரையை அடுத்து செயலாளர் திரு.க.குணலிங்கன் வரவேற்புரை நிகழ்த்தினார்.தொடர்ந்து வருடாந்த அறிக்கையும் செயலாளரினால் வாசிக்கப்பட்டது. பொருளாளர் திரு. ப. றொஜிந்தன் கணக்கு அறிக்கையை சபையில் சமர்ப்பித்து வருடாந்த வரவு செலவினை விளக்கிக் கூறினார். இரு அறிக்கைகளும் சபையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

இதனையடுத்து 'அகல்விளக்கு' (காலாண்டு) சஞ்சிகையின் வெளியீட்டு நிகழ்வு இடம் பெற்றது. திரு.ந.யோகேஸ்வரன் (சேகர்) சம்பிரதாயபூர்வமாக வெளியிட்டு வைக்க திருவாளர்கள் த. சிவகுமார் (உதயன்),ஜெயந்திரன் ஆகியோர் முதற் பிரதிகளை பெற்றுக்கொண்டனர். கூட்டத்திற்கு சமூகமளித்திருந்த அனைத்து உறுப்பினர்களும் சிறப்பு பிரதிகளைப் பெற்று சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வினை கௌரவித்தார்கள். இறுதியில் சஞ்சிகையின் ஆசிரியர் தொகுப்புரையை நிகழ்த்தினார்.

அவர் தனது தொகுப்புரையில் கூறியதாவது

'கைதடி உறவுகளுக்கிடையேயான உறவுப் பாலத்தினை கட்டியெழுப்பும் நோக்குடன் வெளியாகும் அகல்விளக்கு கைதடி உறவுகளின் எழுத்தாற்றலை ஊக்குவிக்கும் வகையில் பாடுபடுவதுடன் புலம்பெயர் நாடுகளில் கட்டி எழுப்பப்பட்டுள்ள கைதடி அமைப்புக்களின் மேம்பாட்டு பணிகளை மேம்படுத்துவதிலும் பங்களிப்பினை செய்யும் . மேலும் அகல்விளக்கில் பிரசுரமாகும் முக்கிய விடயங்கள் யாவும் புத்தக வடிவிலும் வெளியிடப்படும். உறவுகளின் திருமணம் மற்றும் மங்களகரமான நிகழ்வுகளும் நினைவஞ்சலிகள், மரண நிகழ்ச்சிகள் போன்றவையும் இதில் பதிவு செய்யப்படும். அகல்விளக்கு அணையா விளக்காய் ஒளி வீச அனைவரினதும் ஒத்துழைப்பும் ஆதரவும் வேண்டி நிற்கிறோம்'

## நல்ல செயற்பாடுகள் என்றும் தோற்பதில்லை

தலைவர் தலைமையுரையின்போது கூறியதாவது


நல்ல நோக்கத்துடன் ஆரம்பிக்கப்படும் எந்தச் செயற்பாடுகளும் ஒருபோதும் தோல்வியில் முடிவதில்லை அந்த வகையில் தான் எமது ஆரம்பமும் அதன் பின்னர் இன்று வரையு முள்ள கழக செயற்பாடுகளும் அமைந்துள்ளன. ஆம் நல்ல எண்ணத்துடன் ஆரம்பித்தமையால்தான் எமது கிராமத்துக்கு நல்ல சேவையை செய்யக்கூடிய நிலை உருவாகி வருகின்றது.

எங்களைப் பொறுத்தவரை எமது கிராமத்தில் கல்வியிலே தேர்ச்சி பெற்ற மாணவர்களை பாராட்டி கௌரவித்தல் என்பது. முதலாவது தீர்மானமாக இருந்தது. அந்த தீர்மானத்துக்கேற்ப 2005 ஆம் ஆண்டு 96 ஆம் ஆண்டுக்குப் பின்னர் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 13 மாணவர்களையும் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்று 13 மாணவர்களையும் தற்பொழுது 2006 - 2007 ஆம் ஆண்டுகளில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று ஆறு மாணவர்களையும் பல்கலைக்கழகம் கல்வியியற் கல்லூரி உயர் கல்வி நிறுவனத்திற்கு அனுமதி பெற்ற ஆறு மாணவர்களையும் சேர்த்து பிரான்ஸ் கைதடி அபிவிருத்திக் கழகம் கௌரவித்து இரண்டு தடவைகள்

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழியாத நினைவுகள்



திருமதி சிவலிங்கம் செல்லம்மா (கிளி)

எங்களை கருவினில் சுமந்து
தாலாட்டி பாலூட்டி சீராட்டி
நற்குழந்தைகளாய் வளர்த்து
எங்கள் வாழ்வுக்கு ஒளி தந்த தாயே
எமக்காய் எம் இல்லத்தில் நீ ஒளியேற்ற
காலனவன் தீயாய் வந்து உன்னை தீர்த்துவிட்டானே
மாறுமா எங்கள் துயரம் எம் மனங்கள் உள்ளவரை

நெஞ்சத்து நினைவுகளுடன் வாழும்அன்புக் கணவன், பிள்ளைகள், சகோதரர்கள்,மைத்துனர், மைத்துனிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்த நாள் வாழ்த்துக்கள்

**செல்வன் குணலிங்கம் அட்சயன்**
**செல்வி குணலிங்கம் ஆருதி**

பிரான்ஸ் செல் நகரில் வசிக்கும் திரு.திருமதி குணலிங்கம் - புஸ்பராணி தம்பதிகளின் செல்வப் புதல்வன் அட்சயன் தனது 6 வது பிறந்தநாளை ஏப்ரல் 26 ஆம் திகதியும் செல்வப் புதல்வி ஆருதி தனது 2 ஆவது பிறந்தநாளை ஜூலை 5 ஆம் திகதியும் தமது இல்லத்தில் கொண்டாடினார்கள்

**செல்வி ஜெயந்திரன் அச்சிய்**
**செல்வி ஜெயந்திரன் அஜிதா**

பிரான்ஸ் தலைநகர் பாரிஸின் புறநகர்ப் பகுதியான லாக்கூர்நொவ் நகரில் வசிக்கும் திரு.திருமதி ஜெயந்திரன் - அருந்தவமணி தம்பதிகளின் செல்வப் புதல்விகள் செல்சி அச்சிய் தனது 6 ஆவது பிறந்தநாளை மே 22 ஆம் திகதியும் செல்வி அஜிதா தன 4 ஆவது பிறந்தநாளை ஏப்ரல் 15 ஆம் திகதியும் தமது இல்லத்தில் கொண்டாடினார்கள்.

**செல்வன் கதிர்ச்செல்வன் கஜின்**

பிரான்ஸ் செல் நகரில் வசிக்கும் திரு.திருமதி கதிர்ச்செல்வன் - ஜெயந்தி தம்பதிகளின் செல்வப் புதல்வன் கஜின் தனது 1 ஆவது பிறந்தநாளை டிசம்பர் 8 ஆம் திகதி தனதில்லத்தில் கொண்டாட இருக்கின்றார்.

**செல்வி சின்னத்துரை ஆசிலியா**

பிரான்ஸ் பாரிஸில் வசிக்கும் திரு.திருமதி சின்னத்துரை - தயாசீலி தம்பதிகளின் செல்வப் புதல்வி செல்வி ஆசீலியா தனது 5 ஆவது பிறந்தநாளை ஜூலை 10 ஆம் திகதி லண்டனிலுள்ள தமது சித்தப்பாவின் இல்லத்தில் கொண்டாடினார்.

**செல்வி சிறீதர் உமையாள்**
**செல்வன் சிறீதர் யாழவன்**

பிரான்ஸ் Ville de Avray நகரில் வசிக்கும் திரு.திருமதி சிறீதர்- ஞானசீலி தம்பதிகளின் செல்வப் புதல்வி உமையாள் (அனா) தனது 8 ஆவது பிறந்தநாளை ஆகஸ்ட் 27 ஆம் திகதியும் செல்வப் புதல்வன் யாழவன் தனது 6 ஆவது பிறந்தநாளை ஆகஸ்ட் 6 ஆம் திகதியும் கொண்டாடினார்கள்

**செல்வன் பாஸ்கர் அகீசன்**

சுவிஸ் பேர்ண் நகரில் வசிக்கும் திரு.திருமதி பாஸ்கர்- வசந்தி தம்பதிகளின் செல்வப் புதல்வன் செல்வன் அகீசன் தனது 10 ஆவது பிறந்தநாளை ஆகஸ்ட் 2 ஆம் திகதியன்று தனதில்லத்தில் கொண்டாடினார்.

**செல்வி தம்பித்துரை றொசாணி**

ஜெர்மன் Soest நகரில் வதியும் திரு.திருமதி தம்பித்துரை- மோகனா தம்பதிகளின் செல்வப் புதல்வி றொசானி தனது 10 ஆவது பிறந்தநாளை ஜூலை27 ஆம் திகதி பாரிஸ் நகரில் கொண்டாடினார்.

**செல்வன் கயூரன் சாரன்**

பிரான்ஸ் செல் நகரில் வசிக்கும் திரு.திருமதி கயூரன்- தர்மிலா தம்பதிகளின் செல்வப் புதல்வன் சாரன் தனது முதலாவது பிறந்தநாளை ஜூலை 22 அன்று வெகு சிறப்பாகக் கொண்டாடினார்.

**செல்வி ஜெயசீலன் ஜெனுஷா**

பாரிஸ் Brochant இல் வசிக்கும் திரு.திருமதி ஜெயசீலன் தம்பதிகளின் செல்வப் புதல்வி ஜெனுஷா தனது முதலாவது பிறந்தநாளை ஜூலை27 ஆம் திகதி தனதில்லத்தில் கொண்டாடினார்.




**செல்வி கிருபதாஸ் டெனுசியா**

டென்மார்க் கேர்ணிங் நகரில் வசிக்கும் திரு.திருமதி கிருபதாஸ்- தயாநிதி (கைதடி) தம்பதிகளின் ஏகபுதல்வி செல்வி டெனுசியா தனது 3 ஆவது பிறந்தநாளை ஆகஸ்ட் 7 ஆம் திகதி டென்மார்க்கிலுள்ள தனதில்லத்தில் கொண்டாடினார்.

**செல்வி சிவசுப்பிரமணியம் சுமேகா**

கனடா ஸ்காபுறோ நகரில் வசிக்கும் திரு.திருமதி சிவசுப்பிரமணியம் - கேதீஸ்வரி தம்பதிகளின் செல்வப் புதல்வி செல்வி சுமேகா தனது 4 ஆவது பிறந்தநாளினை செப்டம்பர் 5 ஆம் திகதி கொண்டாடுகின்றார்.

**செல்வி கோபு சாதுரியா**

சுவிஸ் சூரிச் நகரில் வசிக்கும் திரு.திருமதி கோபு- கீதா தம்பதிகளின் செல்வப் புதல்வி சாதுரியா தனது இரண்டவது பிறந்தநாளை ஆகஸ்ட் 27 ஆம் திகதி சூரிச்சிலுள்ள தமது இல்லத்தில் கொண்டாடினார்.

## சிரி...சிரி...சிரி.........

ஆசிரியர் :- சுவரில்லாமல் சித்திரம் வரையமுடியுமா?
மாணவன்:- ஆம் சேர்...
ஆசிரியர்:-எப்படி விளக்கமாய் சொல்லு?
மாணவர் :- ம்..இது கூடத் தெரியாமல் எப்படி ஆசிரியரானீர்கள்.. ஒரு வெள்ளை பேப்பரிலை வரையலாம் தானே
ஆசிரியர்:-........

ஒருவர்:- என்ன இண்டைக்கு தபாற்கந்தோரிலை கனக்க சனம் நிக்குது
மற்றவர்:- நாளைக்கு தபால்முத்திரையின்ரை விலை கூடுதாம். அது தான் இண்டைக்கு அதிகமாக வேண்டினால் காசை மிச்சம் பிடிக்கலாம் தானே.
மற்றவர்:-.....

ஆசிரியர்:- தாஜ்ம□ாலுக்கு பெயின்ற் பூசினால் என்னவாகும்?
மாணவர்:- செலவாகும்.
ஆசிரியர்:- ......?....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்



## க.மார்க்கண்டு

தோற்றம் 10.03.1952 மறைவு 26.05.2008

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே
எங்களுக்கு எல்லாமுமாய் இருந்து
எங்களை வாழவைத்த தெய்வமே
இன்று நீங்கள் எம்முடன் இல்லை
என்பதை நம்ப மனம் மறுக்கின்றது

பிரிவுத் துயரில் குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரான்ஸ் ஒன்று..... (4ம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்பட்ட இந்த நிகழ்வில் 38 மாணவர்கள் உங்களால் கௌரவிக்கப்பட்டு அவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு ஊக்கமளிக்கப்பட்டுள்ளது. இதே போன்று தமது கல்வியை தொடர்வதற்கு பொருளாதார வசதியில்லாமல் இருக்கக்கூடிய 30 மாணவர்களுககு வருடந்தோறும் அவர்களின் கல்விக்கான உதவிகளும் எம்மால் வழங்கப்பட்டு வருகின்றது. இப்பணிக்கும் நீங்கள் எல்லோரும் வழங்கும் உதவிக்கும் ஒத்துழைப்புக்கும் எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நான் மேற்குறிப்பிட்ட இரண்டு திட்டங்களும் கைதடி மண்ணின் முன்னேற்றத்திற்காக போடப்பட்டுள்ள அத்திவாரமாக கருதலாம். இதேவேளை சகல நாடுகளிலுமுள்ள எமது உறவுகளுக்கிடையில் நட்புறவுப் பாலத்தை கட்டியெழுப்பும் வகையில் அகல் விளக்கு என்னும் சஞ்சிகையை உங்கள் அனைவரின் உதவியுடன் ஆரம்பித்துள்ளோம். இந்த விளக்கு மென்மேலும் சுடர் விட்டு பிரகாசிக்க உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பை வேண்டி நிற்கின்றோம்.

இன்று எமது மூன்றாவது வருட ஒன்றுகூடல் இன்றைய தினத்தில் நடப்பு வருடத்திற்கான புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் இந்தப் பொறுப்புக்களை ஏற்று செயற்படுவார்கள். அவர்களின் செயற்பாடுகளும் நடவடிக்கைகளும் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றேன்.

நாம் எப்படியான திட்டங்களை நிறைவேற்றுவதாய் இருந்தாலும் எமது கிராமத்தில் சிறந்த நிர்வாகம் இல்லையென்றால் அதனைச் சிறப்பாகச் செய்யமுடியாது போய்விடும். ஆனால் எங்கள் திட்டங்களை வெகு சிறப்பாக நிறைவேற்றுவதற்கும் எமது கருத்துக்களை எற்று செயற்படும் கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத்திற்கு எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். 2003 ஆம் ஆண்டு நான் தாயகத்திற்கு சென்று கல்வி மேம்பாட்டுத் திட்டம் தொடர்பாக அங்குள்ள அனைவரிடமும் உரையாடினேன். ஆரம்பம் முதல் இறுதிவரை எமது திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் முன்னின்று செயற்பட்டவர்கள் நட்புறவுக் கழக நிர்வாகிகள் என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

சுவிஸ், கனடா, லண்டன போன்ற நாடுகளிலுள்ள நம்மவர்களும் நட்புறவுக் கழகத்தின் ஊடாகவே தமது வேலைத்திட்டங்களை தொடர்கின்றார்கள். அண்மையில் லண்டன் மாநகரத்தில் எம்மவர்களின் ஒன்று கூடலின்போது தற்போதைய சூழலிலும் வெகு சிறப்பாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத்தை தமது தலைமைச் செயலகமாக தீர்மானித்து அதன் வழிகாட்டலில் மிகவும் பெரிய வேலைத்திட்டங்களைச் செய்வதற்கு தயாராகி வருகின்றார்கள்.

அதேபோல் நாங்களும் வெகு விரைவில் புலம்பெயர் நாடுகளிலுள்ள எமது உறவுகளின் அமைப்புக்கள் எல்லாம் ஒரே நட்புறவுக் கழகத்தை தலைமைச் செயலகமாக ஏற்று எமது கிராமமக்களுக்கு எங்களால் இயன்ற வேலைத்திட்டங்களைச் செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

ஒரு நிர்வாகம் சிறப்பாக செயற்படுவதற்கு நிதி அவசியமாகக் கருதப்படுகின்றது. இல்லையென்றால் நாம் நினைத்த திட்டங்களை நிறைவேற்ற முடியாது. குறிப்பிட்ட நிர்வாகத்தின் செயற்பாடுகளுக்கு நிதியை அங்கத்தவர்களின் சந்தா மற்றும் நன்கொடை மூலம் தான் திரட்டவேண்டும். ஆனால் நம்மைப் பொறுத்தவரையில் குறைந்தளவு தொகையினரே வருடாந்தம் தமது அங்கத்துவத்தை புதுப்பித்துக் கொண்டிருக்கின்றார்கள். எனவே அனைவரும் இதில் அக்கறை எடுத்து உங்கள் அங்கத்துவத்தை புதுப்பித்தால் நாம் மேற்கொண்டு செயற்படமுடியும். ஆகவே மாதம் 5 யூறோ எமக்குப் பெரிய காசல்ல. நாம் எத்தனையோ ஆடம்பரச் செலவுகளைச் செய்கின்றோம்.ஒரு புதிய சினிமாப்படம் வந்தால் உடனே எவ்வளவு பணம் கொடுத்தேனும் பார்க்கின்றோம். அதேபோல் சினிமாப் பட ஒலி ஒளி நாடாக்களை கடைகடையாகத் தேடித் திரிந்து வாங்குகின்றோம். அதை வாங்க வேண்டாமென்று நான் சொல்ல வரவில்லை. அது தப்பென்று நான் சொல்ல வரவில்லை. நாங்கள் உங்களிடம் கேட்பது மாதம் 5 யூறோ மாத்திரமே. மூன்று மாதத்திற்கு ஒரு தடவையோ அல்லது 6 மாதத்திற்கு ஒரு தடவையோ அல்லது ஒரு வருடத்திற்கு ஒரு தடவையோ நீங்கள் செலுத்தலாம்.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடைய யாப்பு விதிகளின்படி அங்கத்துவ சந்தா செலுத்தாதவர்கள் கூட்டங்களிலோ அல்லது அதன் நிகழ்வுகளிலோ கலந்து கொண்டு தமது கருத்துக்களைக் கூறுவதற்கு தகுதியற்றவர்களாகின்றார்கள். இந்த விதிகளை நாம் ஒவ்வொருவரும் கட்டாயமாக கடைப்பிடிக்க வேண்டும்.

எங்களுடைய கிராமத்திற்கு உதவவேண்டும் என்ற நிர்ப்பந்தம் காரணமாகவே இவ்வாறான ஒரு நிர்வாகக் கட்டமைப்புக்குள் வரவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இதேநேரத்தில் இன்னுமொன்றைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். நாங்கள் இந்த அமைப்பை உருவாக்குவதற்கு எவ்வளவோ கஷ்டப்பட்டோம் என்று உங்கள் எல்லோருக்கும் தெரியும்.2005 ஆம் ஆண்டு நானும் துரைசிங்கமும் சசிகரனும் (அப்பன்) துரைசிங்கத்தின் இல்லத்தில் கூடி எமது கிராம மக்களுக்கு அதுவும் வெளிநாட்டுத் தொடர்பில்லாத உறவுகளுக்கு என்ன செய்யலாம், எப்படிச் செய்யலாம் என்று மூவருமாகச் சிந்தித்தோம். சிந்தனையின் முடிவில் முதலாவதாக எமது உறவுகளை ஒன்றுகூட்டி ஒரு பொது அமைப்பொன்றை உருவாக்குவதென முடிவெடுத்தோம். அன்று தான் இதற்கான அடிக்கல்லை நாட்டினோம். அடுத்தபடியாக பாரிஸ் நகரத்தில் அமைந்துள்ள யூறோஸ் பாக்கிலே எமது உறவுகள் எல்லோரையும் அழைத்து ஒன்றுகூட்டி எமது எண்ணத்தை தெரிவித்தோம். எல்லோரும் ஏகமனதாக ஏற்று இதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும் எவ்வளவு பணம் தரவேண்டும் என்று ஒரு சிலர் உடனே பணத்தை எடுத்து நீட்டினார்கள். அன்று போட்ட அத்திவாரம் படிப்படியாக உயர்ந்து வருகின்றது. .

அன்பான உறவுகளே எவர் எப்படிச் சொன்னாலும் செய்தாலும் நாம் பயணித்துக் கொண்டிருக்கும் பாதையில் எமது தாயகத்தில் அல்லலுறும் உறவுகளுக்கு எம்மால் முடிந்த உதவிகளைச் செய்வோம் என்று இந்நாளில் உறுதி எடுத்துக் கொள்வோம்.

மதிய உணவின் பின்னர் புதிய நிர்வாகிகள் தெரிவு இடம்பெற்றது. இதனையடுத்து கழகத்திற்கான மாதிரி யாப்பு விதிகள் சபையில் வாசித்து காண்பிக்கப்பட்டது. இந்த யாப்பு விதியினை பிரதி செய்து ஒவ்வொரு உறுப்பினருக்கும் அனுப்பிவைத்து அவர்களின் கருத்துக்களை பெற்ற பின்னர் முழுமையாக ஏற்றுக்கொள்வதென இறுதியில் தீர்மானிக கப்பட்டது.

### கைதடி அபிவிருத்திக் கழகம் - பிரான்ஸ் புதிய நிர்வாகிகள் 2008 2009

காப்பாளர் திரு.சி.தங்கத்துரை

தலைவர்: திரு.செ. சின்னதுரை
உபதலைவர் : திரு.சி.தனராஜ்
செயலாளர்: திரு.மா.ஜெகதீஸ்வரன்
உப செயலாளர்: திரு.சி.கதிர்செல்வன்
பொருளாளர்: திரு.சி.தெய்வேந்திரன்

செயற்குழு
திரு.நா. வாமதேவன்
திரு.சி.தர்ஷன்
திரு.சி.சுமன்
திரு.எஸ்.ஜெயந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சாந்தி'யில்லை

நள்ளிரவு நேரம் நல்ல நிலாக்காலம் ஊரெங்கும் ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்ந்திருந்தது. ஆனால் ஒருத்தி மட்டும் அந்த நள்ளிரவிலும் நித்திரையின்றி படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள். ஒரு நிமிடம் அவளுக்கு ஒரு யுகம் போல் கழிந்தது.அன்றைய இரவு விடியமாட்டாதா? என்று அவள் ஏங்கிக்கொண்டிருந்தாள். அடுத்த நாள் காலை தனது அன்புக் காதலனை காண்பதற்காக பிரான்ஸ் நாட்டிற்கு செல்வதற்கு சாந்தி ஆயத்தமான நிலையில் இருந்தாள்.

அவளுடன் அன்பு பாராட்டி காதல் கடிதங்களை பரிமாறிப் பின்னர் பேசிப்பழகியிருந்த அவளது காதலன் வெளிநாடு செல்வதற்காக அவளை விட்டு பிரிந்தபோது அவள்பட்ட வேதனையும் துன்பமும் அவளுக்குத் தான் தெரியும். எத்தனையோ வருடங்களின் பின்னர் காதலனை காணப்போகின்றாள். கைப்பிடித்து கணவன் என்ற பிடிக்குள் அவனுடன் காலமெல்லாம் வாழப்போகின்ற மகிழ்ச்சி அவளை இருப்புக் கொள்ள விடவில்லை.

இந்த எதிர்பார்ப்பும் ஏக்கமும் மகிழ்ச்சியும் சில நிமிடங்களுக்குள் அடங்கிவிடும் என்று அவள் நம்பவில்லை. காதலனுடன் பழகிய நாட்களை அவள் அசைபோட்டு பார்க்கத் தொடங்கியபோது ஊரின் அமைதியை கிழித்துக் கொண்டு ஊர் நாய்கள் அனைத்தும் குரைக்கத் தொடங்கின. பிரதான வீதிக்கு அருகில் அவள்வீடு இருந்தமையினால் வாகனங்களின் இரைச்சல் அவள் காதினை அடைத்தது. இந்திய இராணுவம் நிலை கொண்டிருந்த காலமது. இரவு முழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்ததால் வீதியில் வேறு வாகனங்கள் அந்த வேளையில் பயணிக்கமாட்டாது என்பது அவளுக்கு நன்கு தெரியும். நாய்குரைப்பு, வாகன இரைச்சலுடன் சப்பாத்துக் கால்களின் ஓசையும் தமிழ் உரையாடல்களும் அவள் காதில் விழுந்தன.பயத்தினால் அவள் உடல் முழுவதும் வியர்க்கத் தொடங்கின. படுக்கையை விட்டு எழுந்தவள் தனது அறைக்கதவை தாழ்ப்பாளிட்டு மூடினாள். கதவு மூடினாலும் கண்கள் மூடமுடியவில்லையே.

வீதியில் நடமாடியவர்கள் அவளது வீட்டுக் கேற்றடியில் வந்து நின்றார்கள். வீட்டிலுள்ளவர்களை குரல் கொடுத்து அழைத்தார்கள். இந்த சத்தத்தினால் தனது தாய், தந்தை மற்றும் சகோதரிகளின் உறக்கம் குலைந்துவிடக்கூடாதே என்று எண்ணியவள் துணிவை வரவழைத்துக் கொண்டு வீட்டுக்கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்து 'யார்?' என்று கேட்பதற்கு வாயெடுத்தபோது கேற்றடியில் நின்றவர்கள் சரமாரியாக அவளைச் சுட்டுத்தள்ளினார்கள்.

இந்தச் சூட்டுச் சத்தம் கேட்டு வீட்டிலுள்ள அனைவருமே உறக்கம் கலைந்து எழுந்து வெளியே வந்த போது அவள் இரத்த வெள்ளத்தில் துடித்துக் கொண்டிருந்தாள். தாயார் கட்டியணைத்து மடியில் வைத்து 'ஓ'வென்று கதறினார். தந்தையோ தன்னிலை இழந்து துடிதுடித்தார். சகோதரிகளோ தாயுடன் சேர்ந்து அவளது உடலை அணைத்துக் கொண்டு கதறினார்கள். அரை உயிரில் இருந்த அவள் தண்ணீர்... தண்ணீர்.. என்று கேட்டபின் சடலமாக அன்னை மடியில் கண்மூடினாள்.

கண்சிமிட்டும் நேரத்தில் எல்லாமே நடந்து முடிந்தன. அந்தக் குடு:ம்பத்துக்கு மட்டுமல்ல ஊருக்கே சாந்தியாக இருந்தவளின் பிரிவினால் எல்லோருமே சாந்தியின்றி தவிக்கின்றனர். சாந்தியை பிரிந்தது மட்டுமல்ல சாந்தியே இல்லாமல் போய்விட்டது.

சிங்கன்

# வாத்தியார்

'வாத்தியாரை பிடிச்சிட்டாங்களாம்' அதிகாலை 4 மணிக்கு தொலைபேசியில் வந்த அந்தச் செய்தி என் காதுகளை அதிர வைத்தது. இந்த தகவல் கிடைத்த அடுத்த சில நிமிடங்களில் அடுத்து வந்த தொலைபேசியில் 'வாத்தியாரைப் போட்டுட்டாங்களாம்' என்றதும் நான் நிலைகுலைந்து போனேன்.

எங்கட நாட்டு நிலைமை மோசமாயிருக்கு. வாத்தியாருக்கு எத்தனை தடவைகள் கவனம்..கவனம்.. அவதானமாக நடந்து கொள்ளுங்க எந்த சிக்கலுக்குள்ளேயும் போகாதையுங்கோ.... என்று சொல்லியிருப்பம்....

நியாயத்துக்காக குரல் கொடுப்பது சரியானவற்றுக்காக இறுதிவரை போராடுவது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவது போன்ற பல உயர்பண்புகளை கொண்டவர் வாத்தியார். தொடர்ந்து தொலைபேசி அழைப்புக்கள் வந்த வண்ணமேயிருந்தன.

'வாத்தியாருக்கு என்ன நடந்தாலும் நாங்கள் சும்மா இருக்கக்கூடாது. இன்றைக்கு விடியுறதுக்கு இடையிலை என்ன ஏது என்று அறிஞ்சு போடணும்'

'எவ்வளவு காசு செலவழிந்தாலும் பரவாயில்லை. ஆள் உள்ளுக்கை என்றால் நாங்கள் செலவழிக்கிறம்'

'வாத்தியாற்றை விடயத்தை கவனிக்க நாங்கள் சிலர் ஊருக்குப் போகப்போறம். இந்த விடயத்திலை நீங்கள் என்ன முடிவெடுத்தாலும் நாங்கள் அதற்கு ஆதரவாயிருப்பம்'

'கொழும்போட தொடர்பு கொள்ளுறதா அல்லது இயக்கத்தோடு கதைப்பதா எவரோடு கதைத்தென்றாலும் அந்த நல்ல மனிசனை காப்பாற்றுவம்'

இவ்வாறு பலர் தொலைபேசி மூலம் வாத்தியாரின் நிலை பற்றி என்னோடு ஆதங்கப்பட்டனர். எம்மவரின் உணர்வுகளை புரிந்து கொண்ட நான் எவரும் அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்கவேண்டாம். பணம் இருந்தால் மட்டும் போதாது நாம் விவேகத்துடன் தான் செயற்படவேண்டும் என்று அனைவரையும் ஆறுதல்படுத்திக் கொண்டிருந்தேன்.

பலத்த சிரமத்தின் மத்தியில் ஊருக்கு தொலைபேசி இணைப்புக் கிடைத்தது. வாத்தியாருக்கு ஒன்றும் ஆபத்தில்லை.ஆனா சிறையில தான் வைத்திருக்கின்றார்கள். கந்தசுவாமி கோயிலில் நடைபெற்ற அன்னதான நிகழ்வில் ஏற்பட்ட பிரச்னை காரணமாக அன்னதானம் செய்த ஏழாம் திருவிழா உபயகாரருக்காக வாத்தியார் வாதாடியிருக்கின்றார். அது தான் அவங்கள் எல்லோரும் வந்து அவர் மீது பொய்க்குற்றச்சாட்டு வழக்கு போட்டிருக்கின்றார்கள். நீதிமன்றமும் அதனை நம்பி அவரை கைது செய்ய உத்தர விட்டிருக்குது என்று ஊரிலுள்ள எமது உறவினர்கள் தெரிவித்தனர்.

'கோயிலில பிரச்னை நடக்கேக்கை வாத்தியார் ஊரிலையில்லை. வவுனியாவிலை அல்லவா நிண்டவர். அப்படியிருகக் எப்படி அவர் குற்றவாளியானார்' எனக் கேட்டபோது 'இயக்கம் வன்னியில தான் இருந்தது. ஆனால் நாடெல்லாம் தாக்குதல் நடக்குதே வாத்தியார் வெளிநாட்டிலை இருந்தாலும் அவர் தானே அவங்களை வழி நடத்துவார்' என நீதிவிவகாரத்தில் சம்பந்தப்பட்டோர் வியாக்கியானம் கூறுகின்றனராம்.

1970 களிலையும் இப்பிடித் தான் நடந்தது நியாயம் ஏதுமின்றி எம்மவர் பலர் கைது செய்யபபட்டு கடுமையாக சித்திரவதை செய்யப்பட்டனர்.ஆனால் இன்னும் இப்படியா- எங்கட மண் இன்னும் மாறவில்லையா?வாத்தியார் எவ்வளவு பெரிய மனிதர். நீதிமன்றங்களும் மற்றவர்களும் தீர்க்கமுடியாத எத்தனையோ பிரச்னைகளை சமாதான வழியிலை தீர்த்து வைத்தவர். காணிப்பிரச்னை, வேலிப்பிரச்னை, கலியாணப்பிரச்னை,குடும்ப பிரச்னை என பல பிரச்னைகளை தீர்த்து வைத்தவர். கிராமத்திலுள்ள அனைவருக்கும் ஓடி ஓடி உதவி செய்பவர்.

எந்தச் சபையிலும் எவரிடத்திலும் நேருக்கு நேர் நின்று பேசக்கூடிய ஆற்றல் உள்ளவர். பேச்சில் மட்டுமல்ல செயலிலும் வல்லவர் அதனால் தான் அவர் கூட்டுறவு துறையில் இருந்து ஆசிரியராகி அதிபராக உயர்ந்து நிற்பவர்..அவரது நல்ல பண்புகளையும் தொண்டுள்ளத்தையும் புரிந்து கொண்ட மக்கள் எல்லோரும் கூடி அவருக்கு சமாதான நீதவான் அந்தஸ்தைப் பெற்றுக் கொடுத்தனர். அவருடைய செல்வாக்கினையும் புகழையும் பொறுக்கமுடியாத சிலர் அவரைப் பற்றி தவறான கருத்துக்களை பரப்பிய போதும் அவை எதுவும் எவரிடமும் எடுபடவில்லை. அவர் கைது செய்யப்பட்டதுமே எல்லோருமே ஒன்றுபட்டு குரல் கொடுக்கத் தொடங்கியது அவரது செல்வாக்குக்கு உதாரணமாகின்றது.

அவர் வெளியில் வரமுடியாத வகையில் பல்வேறு குற்றச் சாட்டுக்களை நீதிமன்றம் பட்டியலிட்டது. எல்லாமே பொய்யானவை தான். வாத்தியாரை இப்படி வெளியில் வரமுடியாத வகையில் சட்டத்தின் பிடியில் வைத்திருந்தால தான் மற்றவர்களை அடக்கமுடியும். இது வழக்கு பதிவு செய்தவர்களின் நினைப்பு வாத்தியார் உள்ளுக்கையிருக்க நாம் சும்மாயிருக்க முடியுமா? பல தேசங்களை, கண்டங்களை கடந்து பல்லாயிரம் மைல்களுக்கப்பால் நாம் வாழ்ந்தாலும் எமது உயிரும் உணர்வும் எங்கள் உறவுகளுடன் தான்...பல சந்திப்புக்கள் முயற்சிகள் மேற்கொளளப்பட்டன ..விளைவு.. சாதகமானது.. வாத்தியார் வெளியே வந்தார். ஆனால் நிபந்தனையுடன் தான் நடமாடுகின்றார். அவரது தோற்றமும் செயற்பாடுகளும் வழக்காளிகளையே மனம் மாறச் செய்யும்.

தனது குடும்பத்தினருக்கு பாதிப்பு வரும்பொழுது வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? நியாயத்துக்காக குரல் கொடுப்பது குற்றமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீத்தார் துயர் பகிர்வோம்

## அமரர் ச.கணேசன்


கைதடியில் காலமான அமரர் சடையன் கணேசன் அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் பிரிவுத்துயரத்தில் மூழ்கிப்போயிருக்கும் அவரது குடும்பத்தினரின் துயரத்திலும் பங்கெடுத்துக் கொள்கிறோம்.

## அமரர் க. மார்க்கண்டு

கைதடியை பிறப்பிடமாக கொண்டவரும் நீர்கொழும்பில் தற்காலிகமாக வசித்து வந்தவருமான கட்டையன் மார்க்கண்டு அவர்கள் மறைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரத்தி மூழ்கியுள்ளோம். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துவதுடன் அவர் தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## அமரர் செல்வி இ.இந்துஜா

கைதடி தெற்கினை வசிப்பிடமாகக் கொண்ட திரு திருமதி இந்திரபாலன் ஈஸ்வரி தம்பதிகளின் செல்வப்புதல்வி செல்வி இந்துஜா காவியமான செய்தி ஆழ்ந்த துயரத்தில் எங்களை ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் பிரிவுக்கு எங்கள் அஞ்சலிகளை தெரிவித்துக் கொள்வதுடன் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.



## அமரர் திருமதி செல்லம்மா சிவலிங்கம

கைதடி நவபுரம் திரு.எஸ்.சிவலிங்கம் அவர்களின் அன்புத்துணைவியார் திருமதி செல்லம்மா (கிளி) அவர்கள் ஆகஸ்ட் 2 ஆம் திகதியன்று அகாலமரணமானார். அன்னாரின் பிரிவுக்கு எங்கள் அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரது குடும்பத்தினரின் துயரிலும் பங்கு கொள்கின்றோம்.

## அமரர் திருமதி துரைசிங்கம் பாக்கியம்

கைதடியை பிறப்பிடமாகவும் திருநெல்வேலி கிழக்கு பாரதிபுலத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துரைசிங்கம் பாக்கியம் அவர்கள் யூலை 26 இல் கொழும்பில் காலமானார்.அன்னாரின் பிரிவால் துயரத்தில் மூழ்கியுள்ள அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் குடும்பத்தினரின் துயரத்திலும் பங்கெடுத்துக் கொள்கின்றோம்


# ATC TELECOM

***Carte Telephonique**
***Fax**
***Photo copie**
***Internet**

**25 Rue de Patay,**
**75013 Paris**
**Tel: 01/ 44 23 81 86**
**Fax: 01/44 23 81 86**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org